# திருக்கோயில்



தென்முகம் நோக்கியுள்ள

அருள்மிகு துர்க்கையம்மன்

செப்டம்பர்
2001

விலை
ரூபாய் ஐந்து



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் 15.8.2001 அன்று சுதந்திரத் திருநாள் பொது விருந்து – சிறப்பு வழிபாடு விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் உதவி ஆணையாளர் – செயல் அலுவலர் திருமிகு ஆ. குப்புசாமி அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 43 | திருவள்ளுவர் ஆண்டு 2032 | விசு - புரட்டாசி செப்டம்பர் 2001 | மணி 9 |
|---|---|---|---|



**சிறப்பாசிரியர்**

**திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

**ஆசிரியர்**

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

**''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்**

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பி.எல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**வேதாரண்யம்**
**அருள்மிகு துர்க்கையம்மன்**

## பொருளடக்கம்


நவராத்திரி விழாவின் சிறப்பு
— முனைவர் த. அமிர்தலிங்கம்

கந்தர் சஷ்டி விரத மகிமை - கி. நளினி பி.ஏ.
அரசு இணைச் செயலாளர், சுகாதாரத்துறை

புதுக்கோட்டை திருக்கோயில்களைச் சார்ந்த
விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசாமி
கோயில் தல வரலாறு - எஸ். முருகேசன், எஸ். மைதிலி

தெய்வ வாகனங்கள் - டாக்டர் டி. செல்வராஜ்

திருஞானசம்பந்தரின் அழைப்பு
- சித்தாந்தரத்தினம் த. ஆறுமுகம்

கந்தர் அநுபூதி - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

கடவுள் நம்மை கைவிட மாட்டார்
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

''உயிர் கொடுத்துப் பழிகொண்டான்'' - என். சிவராமன்
பி.காம்., பி.எல்.

தட்சிணாமூர்த்தி திருவருட்பா — விரிவுரை
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

ஆழ்வார்கள் பாடலின்படி
பெருமாளுக்கு உரிய மலர்கள் - ஸ்ரீகாந்த் பட்டாச்சாரியார்





*உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :*

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

*தொலைபேசி : 8279407*



# நவராத்திரியின் சிறப்பு

- முனைவர் த. அமிர்தலிங்கம்



## முன்னுரை

சக்தி வழிபாடு, மிகத் தொன்னெடுங்காலம் முதலே நம் இந்திய நாட்டில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்சோதாரோ என்னும் இடத்தில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், அம்பிகை ஆகிய உலக அன்னையின் மண்சிலைகள் பலவும்கூட உள்ளன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்து வெளி நாகரிக காலம் ஏறத்தாழக் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனாதலின், சக்தி வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழமையுடையது என்பது தெளிவாம்.

சிந்து வெளிப் பகுதியிற் கிடைத்த அம்பிகையின் சிலைகளைப் போலவே, பாரசீகம், ஏஜியன், எலம், மெசபட்டோமியா, டிரான்ஸ்காஸ்பியா, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், கிரீட், பால்கன், எகிப்து முதலிய பல்வேறு நாடுகளிற் கிடைத்த சிலைகளும் இருப்பதனால், அம்பிகை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் தொன்று தொட்டே பரவியிருத்தல் வேண்டும் என்று, சர் ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞர் ஆராய்ந்து கூறுகின்றார்.

## சக்தி வழிபாடு

சிலர் கடவுட் பெரும் பொருளை 'அது' என்று சுட்டுகின்றனர். மற்றும் சிலர் 'அவன்' எனக் குறிப்பிடுகின்றனர். 'அது' என்று சுட்டினால் கடவுள் அஃறிணைப் பொருள் என முடியும். 'அவன்' என்றாலோ, கடவுள் ஆணாக மட்டுமே இருப்பதாகக் கொள்ளப்படும். கடவுள் எல்லாமாயும் அல்லவாயும் நிற்கும் இயல்புடையவர் ஆதலின், அவரை நாம் ''அவன் அவள் அது'' என மூன்று நிலைகளிலும் குறிப்பிடுதல் பொருந்தும். இறை நிலையை 'அவள்' எனத் தக்கவாறு கொண்டு வழிபடும் முறையே சக்தி வழிபாடு ஆகும்.

## சமுதாய வாழ்வு

கடவுட் பெரும் பொருளைப் பெண்ணாக, பெண் வடிவத்தில் வைத்துப் போற்றுதலையே, நாம் சக்தி வழிபாடு என்கின்றோம். சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பண்டைக் காலம் முதலே இந்தியப் பெண்மணிகள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். தாயாகவும், மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், உலகியல் வாழ்விற் பெண்கள் பல்வேறு நிலைகளிற் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகின்றனர். ஒரு பெண்ணின் சிறப்பும் கடமையும் பொறுப்பும், குடும்ப வாழ்விற் படிப்படியே வளர்ந்தோங்குகின்றன.

பெண்மை நலங்கள் அனைத்தும் தாய்மை நிலையிலேயே சிறந்தோங்கி ஒளிவீசித் திகழ்கின்றன. அன்பும் அருளும் பரிவும் இரக்கமும் தூய்மையும் மென்மையும் தியாகமும் ஆகிய சிறந்த தெய்விகப் பண்புகள் அனைத்தும் தாயிடமே ஒருங்கே அமைந்து நிலவுகின்றன. தாய்மையின் சிறப்பனைத்தும் தக வுணர்ந்தே, நம் முன்னைச் சான்றோர்கள் கடவுளைத் தாயாக வழிபட்டு வரலாயினர். பெண்ணினத்தின் எண்ணரிய பெருஞ் சிறப்புக்களையெல்லாம் இனிது உணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே, சக்தி வழிபாடு எனலாம்.

## தாயின் பிரிவு

சக்தியை உலகுயிர்களுக்குத் தாயாகச் சமய நூல்கள் போற்றுகின்றன. தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளையெல்லாம் மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவு காட்டி நலஞ் செய்கின்றாள். அவ் வாறே சக்தியாகிய தேவியும் உலகுயிர்கள் இயற்றும் பிழைகளையெல்லாம் பொறுத்து அருள் புரிகின்றாள்.

தந்தை தன் பிள்ளைகள்பாற் சினங்கொள்ள நேர்ந்தவழி, தாய் பிள்ளைகளின் சார்பிற் பரிந்துரை யாடித் தந்தையின் சினத்தைப் போக்கி நன்மை புரிகின்றாள்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து,
நீமுத்தம் தாஎன் றவர் கொஞ்சும்
வேளையில், நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகள்
எல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்,
வாய்முத்தம் சிந்தி விடுமோ?
நெல்வேலி வடிவம்மையே!

எனக் கவிஞர் ஒருவர் கவினுறப் பாடுவது போல, இறைவனாகிய தந்தை உலகுயிர்கள் ஆகிய மக்கள் செய்யும் தீவினைகளுக்காகச் சினங்கொண்டு ஒறுத் தொழிக்காத படி, தாயாகிய அம்பிகையே தன் பெருங் கருணையாற் பரிந்துரை கூறித் தடுத்துக் காப்பாற்றி யருள்கின்றாள்.

## தென்னகத்தின் பண்பாடு

உலகுயிர்களின் உய்தி கருதி, இறைவனின் திருவருள் செயற்படும் இவ்வியல்பினைத் தாயின் தண்ணளியோடு ஒப்பிட்டு, ஆழ்வார்களும் நாயன்மார் களும் தமது செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களிற் சிறப்புறப் பாடிப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

சிவபிரானுக்கு உமையம்மையையும், திருமா லுக்குத் திருமகளையும், சக்தியாக வைத்துத் தாய்மைத் தெய்வத்தைப் போற்றும் வழிபாட்டு முறை, முதன் முதலில் தென்னிந்தியாவிலேயே தோன்றிய தென்றும், இது தென்னகத்தின் சிறப்பியற் பண்பாடு என்றும், ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. சுநீல் குமார சாட்டர்ஜி அவர்கள் குறிப்பிடுதல், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

## இளங்கோவடிகள்

தமிழ் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சக்தி அல்லது தேவி வழிபாடு சிறப்புற நிகழ்ந்து வந்தது. பாலைத் திணைக்குரிய தெய்வமாகத் துர்க்கை (கொற்றவை) போற்றப்பெற்றாள். சிலப்பதி காரத்தில் ''வேட்டுவவரி'' என்னும் பகுதியில், இளங்கோவடிகள் சக்தி வழிபாட்டின் இயல்பையும், அதன் சிறப்பையும் அழகுறப் பாடியருளியுள்ளார். சக்தி வழிபாடு சிவ வழிபாட்டோடு தொடர் புடையதாகலின், சிவ பெருமானுக்கு உரிய நெற்றிக் கண், நீல கண்டம் - மேரு மலையாகிய வில்லை வளைத்தல் - சூலம் ஏந்துதல் - யானையின் தோல் போர்த்தல் முதலிய பண்புகளை அம்பிகைக்கும் உரியனவாக வைத்து,

'நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டம்'
'நஞ்சுண்டு கறுத்த கண்டி'
'அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்'
'வளையுடைக் கையிற் சூலம் ஏந்தி'
'கரியின் உரிவை போர்த்த அணங்கு'

என்றெல்லாம் இளங்கோவடிகள் சக்தியைக் குறித்துப் பாடுகின்றார். மேலும் 'அமரி - குமரி - கவுரி - சமரி - சூலி - நீலி - மாலவற்கு இளங்கிளை (தங்கை) ஐயை - செய்யவள் - வெய்யாள் - தடக்கைப் பாய்கலப் பாவை - பைங் கொடிப்பாவை - ஆய்கலைப் பாவை - அருங் கலைப் பாவை - தமர்தொழ வந்த குமரி' என்றும், பலவகைகளில் தேவியின் சிறப்பைச் சிலப்பதிகாரம் போற்றுகின்றது.

## சிலப்பதிகாரம்

செந்தமிழ்ப் பெருங் காப்பியம் ஆகிய சிலப்பதிகாரம் என்னும் சிறந்த பெருநூலில், சக்தி வழிபாடு பற்றிய பலதிறக்குறிப்புக்கள் அமைந் திருக்கக் காண்கின்றோம். கூடல் மாநகரிற் கோவலன் கொலையுண்டு மடிகின்றான். கணவன் கொலை யுண்ட செய்தி அறிந்த கண்ணகி பெரிதும் வருந்து கின்றாள். பாண்டிய வேந்தனைக் கண்டு, தன் கணவன் 'கள்வன் அல்லன்' என்று மறுத்துரைத்துத் தெளிவுறுத்த விரும்புகின்றாள். பாண்டியனின் அரண்மனை நோக்கிச் செல்கின்றாள். அங்கிருந்த வாயில் காவலனை விளித்து, அரசனுக்குத் தன் வருகைபற்றி அறிவிக்குமாறு பணிக் கின்றாள். அவள் அவளது தோற்றமும் சீற்றமும் கண்டு அஞ்சி நடுங்கி ஓடோடிச்சென்று, அரசனுக்குக் கண்ணகி யின் வருகைபற்றித் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

''அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்!

அறுவர்க்கு இளைய நங்கை! இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு! சூருடைக்
கானகம் உகந்த காளி! தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்!
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்!''

என வரும் வரிகளால், சக்தியின் வெவ்வேறு திறக் கூறுகள் ஆகிய கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை என்பன சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெற்றிருத்தல் காணலாம்.

## நவராத்திரி

நவராத்திரி என்பது, சக்தி வழிபாடு குறித்துச் சிறப்புறக் கொண்டாடப்பெறும் விழாவாகும். ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி மாதத்தில், வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை, ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுதலினால், இது நவராத்திரி என வழங்கப்பெறும். பத்தாம் நாள் ஆகிய விஜய தசமியையும் விழா நாளாகச் சேர்த்துக் கணக்கிட்டுத் தசரா என்றும், இவ்விழாவைக் குறிப்பிடுவது உண்டு. உலகத்தைத் துன்புறுத்தி வந்த மகிஷாசுரன் என்னும் கொடிய அரக்கனை எதிர்த்து ஒன்பது நாட்கள் போரிட்டு, தசமி ஆகிய பத்தாம் நாளில், அம்பிகை அவனை அழித்து வெற்றி கொண்டனள் ஆதலின், அந்நாளை விஜயதசமி எனச் சிறப்பித்து வழங்குவர். மகிஷாசுரனை வென்று கொன்ற அம்பிகையினைத் துர்க்கை என்றும், கொற்றவை என்றும் நூல்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரத்தில் 'வேட்டுவ வரி' என்னும் பகுதியில், மகிஷாசுரன் என்னும் எருமைத் தலை அரக்கனை அழித்து, வெற்றி கொண்ட கொற்றவை ஆகிய துர்க்கையினைப் பற்றிய பல குறிப்புக்களும் பாடல்களும் காணப்படுகின்றன.

## மகிஷாசுர மர்த்தனி

துர்க்கை என்னும் கொற்றவையானவள், தனது கணவராகிய சிவ பெருமானைப்போல, ஆனைத் தோலைப் போர்த்திக் கொண்டும், புலியின் தோலை ஆடையாக அணிந்து கொண்டும், மகிஷாசுரன் ஆகிய எருமை அரக்கனின் தலையினை மிதித்துக் கொண்டு, தேவர்கள் எல்லாரும் வணங்கும்படி, மறை நூல்களுக்கெல்லாமும் மறை பொருளாகி, ஞானக் கொழுந்தாகக் காட்சி தருகின்றாள்.

ஆனைத் தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து, எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்!
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!

வளையல்களை அணிந்த கையில் வாளை ஏந்திக் கொண்டு, வலிமை மிக்க மகிஷாசுரனை அடக்கி வென்று, கலைமானை ஊர்தியாக ஏற்று, மும்மூர்த்திகளும் தங்கள் இதய கமலத்தில் தியானித்து வணங்கி வழிபடும் அருட் பெருஞ்சோதி விளக்காக, அம்பிகை விளங்குகின்றாள்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலை மிசைமேல் நின்றாயால்!
அரியரன்பூ மேலோன் அகிமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்!

திருமாலுக்குரிய சங்கினையும் சக்கரத்தையும் தாமரை மலர் போன்ற திருக்கைகளிலே ஏந்திக் கொண்டு, சிவந்த கண்களையுடைய சிங்கம் ஆகிய ஊர்தியின்மீது, கங்காதரனும் நெற்றிக் கண்ணனும் ஆகிய சிவபெருமானின் இடப்பாகத்தில், அர்த்த நாரீசுவரியாகத் தேவி அருட்காட்சி வழங்கியருள் கின்றாள்.

சங்கமும் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நினறாயால்!
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்!

- சிலப்பதிகாரம்

## முடிவுரை

இவ்வாறு எல்லாம் தேவி வழிபாடு, தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே சிறப்புற நிகழ்ந்து வந்தமை தெளியலாம்.

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர்வறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம்தரும்; பூங்குழாள்
அபிராமி கடைக்கண்களே.

என அபிராமி பட்டர், தமது அபிராமி அந்தாதி என்னும் நூலில் பாடியருளியவாறு போல, உலக அன்னையாகிய பராசக்தியைப் பரவி எல்லா நலங் களையும் பெற்று உய்யலாம் என்பது திண்ணம். நவராத்திரி விழா நிகழும் நாட்களில், நாமனைவரும் அம்பிகையைப் போற்றி, அவள் அருளைப் பெற்று நலமுற வாழ முயலுவோமாக!

★★★

# கந்தர் சஷ்டி விரத மகிமை

- கி. நளினி. பி.ஏ.
அரசு இணைச் செயலாளர், சுகாதாரத்துறை, தலைமைச் செயலகம்.

முருகப்பெருமானுக்கு உரிய வாரவிரதங்களில் சிறந்தது வெள்ளிக்கிழமை விரதம் ஆகும். மாதவிரதங்களில் சிறந்தது கிருத்திகை விரதம். ஆண்டு விரதங்களில் சிறந்தது மகாகந்தர் சஷ்டி விரதம். கந்த புராணம் கந்த விரதப்படலத்தில் கந்தனுக்குரிய விரத மகிமைகளை மிக விரிவாக விளக்கிக் கூறுகின்றது.

ஐப்பசி மாதம் வளர்பிறையில் முதல் ஆறு நாட்கள் மேற்கொள்ளவேண்டிய விரதம் கந்தர்சஷ்டி விரதம் ஆகும். தேவர்கள், முனிவர்கள் உள்ளிட்ட யாவரும் கந்தர்சஷ்டி விரதம் மேற்கொண்டு முருகப் பெருமானின் திருவருள் பெற்று உய்கின்றனர் என்பதனைக் கந்தப்புராணம் சிறப்புறக் கூறிப் போற்றுகின்றது.

'வெற்பொடும் அவுணன் தன்னை
வீட்டிய தனிவேல் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் நோற்றார்''

எனவரும் கந்தப்புராணப் பாடலைக் காண்க. துலையின் திங்கள் என்பது ஐப்பசி மாதத்தையும், சுக்கில பக்கம் என்பது வளர் பிறையையும் குறிப்பதாகும்.

வசிட்ட முனிவர் கந்தர்சஷ்டி விரதமகிமையை விவரிக்கக் கேட்ட முசுகுந்த மாமன்னன். கந்தர்சஷ்டி ஆறுநாட்களும் விரதமிருந்து முருகப்பெருமானை நோக்கித் தவமிருந்தான். இவ்விரத மகிமையால் முருகப் பெருமானை மயில்வாகன மூர்த்தியாகத் தரிசிக்கும் பேறு முசுகுந்தனுக்குக் கிடைத்தது. வீரபாகு முதலான நவவீரர்களைத் தன் துணைவர்களாகவும் இருக்க வரம்பெற்றான் எனக் கந்த விரதப் படலம் விவரிக்கின்றது.

முருகப்பெருமானின் ஒன்பது தம்பியரில் முதல்வர் வீரபாகு தேவர். நவசக்திகளில் மாணிக்க வல்லியிடம் தோன்றியவர். இவரே சூரபதுமனிடம் தூதுசென்று இந்திரன் மகனான சயந்தனை சிறையிலிருந்து விடுவித்துச் சரவணபவனைச் சரண் அடைந்து உய்யுமாறு அறிவுறுத்தியவர். சூரபதுமனின் வீரம்கனான பானுகோபனை வதைத்த மாவீரர்.

பானுகோபனை வதைத்த வீரத்திற்குப் பரிசாக திருமால்பதவி, பிரம்மபதவி, குபேரபதவி, இந்திர பதவி வேண்டுமா என முருகப்பெருமான் கேட்ட போது அவற்றையெல்லாம் மறுத்து முருகப் பெருமானின் திருவடிப்பதமே வேண்டும் எனக் கேட்டுப்பெற்ற ஒப்பற்ற முருகபக்தரே வீரபாகுதேவர்.

''கோலம் நீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசைக் கனவிலும் வெஃகேன்
மால் அயன் பெறு பதத்தையும் பொருள்என
மதியேன்
சாலநின் பதத்து அன்பையே வேண்டுவேன்
தமியேன்''

என்று வேண்டி முருகப்பெருமானின் திருவடிப்பதம் பெற்ற பெருமைக்கு உரியவரான வீரபாகுத்தேவரைத் தம் துணைவராகக் கந்தர்சஷ்டி விரதமகிமையால் முசுகுந்தர் பெற்றார் எனில் இவ்விரதமகிமையை என்னென்னபது?

கந்தர் சஷ்டி விரதம் இருந்தால் அரியதான மகப்பேறு மிக எளிதினில் வாய்க்கும் என்பதும் கண்கண்ட உண்மை ஆகும்.

''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்பது பழமொழி. இப்பழமொழி கந்தர்சஷ்டி விரதமகிமையைக் குறிப்பதென அமரர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நயம்பட விளக்குவார்கள்.

சட்டியில் இருந்தால் - சஷ்டியில் விரதம் இருந்தால்

அகப்பையில் வரும் - அகமாகிய வயிற்றின்கண் உள்ள கருப்பையில் மகப் பேறு வாய்க்கும்.

இதுவே இப்பழமொழிக்குரிய மெய்ப்பொருள் என்று அமரர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் விளக்கம் அளித்துள்ளார்கள்.

பெரிய புராணம் எனும் ''தொண்டர்பெருமை'' போற்றும் தெய்வக் காவியத்தில் கந்தர்சஷ்டி விரதம் காரணமாகவே ''கண்ணப்ப நாயனார்'' எனும் தெய்வக் குழந்தை திருஅவதாரம் புரிந்தது என்பதனைச் சேக்கிழார் பெருமானும் விவரித்திருக்கக் காணு கின்றோம்.

நாகன் - தத்தை எனும் வேடுவத் தம்பதி யினருக்குக் குழந்தைச் செல்வமே வாய்க்கவில்லை. ''இனி குழந்தை பிறக்க வாய்ப்பில்லை'' என்று மருத்துவர் உள்ளிட்ட பலரும், கைவிட்டு விட்ட வேளையில் கந்தர்சஷ்டி விரதம் இருந்து அவ் வேடுவத் தம்பதியர் வழிபட, முருகப்பெருமான் திருவருளால் முருகனுக்கு ஒப்பான கண்ணப்பர் எனும் தெய்வக்குழந்தை தோன்றியது என்பதைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் விவரித் திருக்கும் அருமையான பாடல்கள் பின்வருமாறு:

''பொருவரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கு இனிப் புதல்வர் பேறே
அரியது என்று எவரும் கூற
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கல் செவ்வேல்
முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்''

''வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேர்அணங்கு ஆடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை''

''பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற
எந்தையார் மைந்தர் ஆன
மயிலுடைக் கொற்ற ஊர்தி
வரையுரம் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளி னாலே''

''கலைமலிந்த சீர்நம்பி'' என அருளாளர்கள் யாவரும் கொண்டாடும் கண்ணப்பர், கந்தப் பெருமானின் கந்தர்சஷ்டி விரத மகிமையால் தோன்றி னார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

கந்தர்சஷ்டிவிழா முருகப்பெருமான் திருக் கோயில் கொண்டுள்ள அனைத்துத் திருத்தலங்களி லும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றுவரு கின்றது. சூரபதுமனை வெல்வதற்காக முருகப் பெருமான் இவ்வுலகிற்கு வந்து, பாசறை அமைத்துத் தங்கிய பெருமையுடைய திருச்செந்தூர் திருத்தலத் தில் கந்தர்சஷ்டிவிழா ஒவ்வொரு ஆண்டும் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது.

தெய்வங்கள் தீமையே வடிவான அசுரர்களை அழித்து ஒழிப்பதே பொதுவான வரலாறு ஆகும். முருகப்பெருமான் அதற்குமாறாகத் திருச்செந்தூரில் பாசறை அமைத்து சூரபதுமனிடம் போர் நிகழ்த் தியபோது, சூரபதுமனை அழித்து ஒழிக்காமல் பாவி யாகிய அவன் பேரிலும் கருணைபுரிந்து, தீமையே வடிவான அவ்வரக்கனையும் மயில்வாகனமாக, சேவற் கொடியாகக் கொண்டு திருவருள்புரிந்தமை குறிப் பிடத்தக்கது. இவ்வற்புத வரலாறே ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி வளர்பிறை முதல் ஆறுநாட்களில் திருச்செந்தூர் திருத்தலத்தில் மகாகந்தர் சஷ்டி விழா வாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சூரபதுமனின் ஒருபாதி ''நான்'' என்கின்ற அகங்காரம். மற்றொரு பாதி ''எனது'' என்கிற மம காரம். முருகப்பெருமான் அசுரனாகிய சூரபதும னுக்கும் போர்க்களத்தில் விசுவருபதரிசனம் வழங்கி, அவனுடைய அகங்கார, மமகாரங்களை ஒடுக்கி மயிலும், சேவலுமாக அவனை ஆட்கொண்டு திரு வருள் புரிந்தார்.

முருகப்பெருமான் தம் திருவருள்நோக்கி னால் சூரபதுமனின் பாவத்தைப் போக்கி மயிலாக நின்ற அவன் ஒருபாதியைத் தம் வாகனமாகவும், சேவலாகநின்ற அவன்மறுபாதியைத் தம் கொடியாக வும் கொண்டருள்புரிந்த திருவருள் திறத்தைக் கொண்டாடியே மகாகந்தர்சஷ்டிவிழா திருச்செந் தூரில் ஒவ்வொர் ஆண்டும் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டு வருகின்றது.

''தீயவை புரிந்தார் ஏனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ
அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''

என்று கருணைமாக்கடலாக விளங்கும் கந்தப் பெருமானின் திருவருள் திறத்தைப் போற்றிப்புகழ் கின்றது கந்தப்புராணமகாக் காவியம்.

இவ்வாறு திருச்செந்தூரில் பாசறை அமைத்து சூரசம்ஹாரம் புரிந்த முருகப்பெருமான், தேவதச்சனைக் கொண்டு திருச்செந்தூரில் திருக்கோயில் ஒன்றையும் அமைத்துத் தாமே தம் தந்தையாம் சிவபெருமானை வரவழைத்து அவருக்குப் பூசைபுரிந்த பெருமையும் கொண்ட ஒப்பற்ற பதி, திருச்செந்தூர் பதியாகும்.

முருகப்பெருமான் சிவபெருமானுக்குத் தாமே தம் திருக்கரங்களால் திருமஞ்சனம் செய்தார். மணி, விளக்கு, தூபம் முதலானவற்றைத் தேவர்கள் எடுத்துத் தந்திட, ஆகமமுறைப்படி அகம்நிறை காதலோடு முருகப்பெருமான் சிவபெருமானை வழிபட்ட பெருமை கொண்டது திருச்செந்தூர் திருத்தலம் ஆகும்.

சிவபெருமான்மேல், முருகப்பெருமான் மலர்கள் இட்டு அருச்சனை செய்தார். அப்பூசையைக் காணும்பேறு பெற்று பக்திப்பரவசம்கொண்ட திருமால், பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் பக்திப்பரவசத்துடன் ''முருகா முருகா'' என்று அழைத்து உருகினர். கையில் எடுத்த மலருடன் முருகப்பெருமான் தேவர்களைத் திரும்ப நோக்கிக் காட்சி வழங்கும் அற்புதத்தை இன்றும் திருச்செந்தூர் திருத்தலத்தில் நாம் கண்டு இன்புறலாம்.

முருகப்பெருமானின் திருத்தலங்கள் பலவும் மலைமேல் இருக்கத் திருச்செந்தூர் திருத்தலம் கடற்கரையில் அமைந்து பெருமை பெற்று விளங்குகின்றது.

சிவபெருமான் கருணைக்கடல்; அக்கடலினின்று அடிக்கும் குமரஅலை திருச்செந்தூர் கடற்கரையில் திருவருள் புரிகின்றது என்று திருப்புகழில் போற்றுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

''திங்கள் அரவுநதி சூடிய பரமர்
தந்த குமர அலையே''

என்பது அருணகிரிநாதர் அருள்வாக்கு.

கடற்கரையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பூசிப்பவர் பாவங்களும் துன்பங்களும் அலைகள் தீர்ந்துபோவதைப்போல தீர்ந்து போய்விடும் எனவும், அடியார்களைப் பிறவிக்கடலிலிருந்து கரைஏற்றிக் காக்கும் வண்ணம், கருணை மூர்த்தியாகிய செந்தில்முருகப்பெருமான் கடலோரமே கோயில்கொண்டு விளங்குகின்றார் எனவும் ஆதி சங்கரர் தாம் அருளியுள்ள ''சுப்பிரமணிய புஜங்கம்'' எனும் நூலில் போற்றியுள்ளார். ஆதிசங்கரர் சமஸ்



கிருதத்தில் பாடியுள்ள அப்பாடங்களின் தமிழாக்கப் பாடல்கள் பின்வருமாறு:

''திரைபொன்றுமா போலே வினைஒன்றும் இன்றே
திருமுன்பு வம்மின்கள் என நின்றவன் போல்
திரைபந்தியாய் வந்து கரைநின்ற செந்திற்
சேயோனை இதயத்தில் வைத்துள்ளேனே''

''என்முன்னர் வந்தோர் பிறப்பென்ற வேலை
யினை ஏறினார் என்று நிலமேல் விளங்கித்
துன்னும் கடல் செந்தில் உறைகின்ற தூயோன்
துங்கபராசக்தி அருள்சேயை நினைவாம்.''

திருச்செந்தூரில் முருகனுடைய விபூதிப் பிரசாதத்தைப் பன்னீர் இலையில் வைத்து அடியார்களுக்குத் தருவார்கள். அதைத் தரிப்பதற்கு முன்பே - கண்ணுற்றபோதே கொடியநோய்கள், பேய், பூதங்கள், நம்வினைகள் யாவும் ஓடிவிடும் எனவும் போற்றியுள்ளார் ஆதிசங்கரர்.

''கண்டால்நின் இலைநீறு கைகால் வலிப்பு
காசம் கயம் குட்டம் முதலாய நோயும்,
விண்டோடுமே, பூதபைசாசம் யாவும்
வினையாவுமே செந்தில் அமர் தேவேதேவே''.

முருகப்பெருமான் சற்குருவாகப் பொலிந்து சகலநலங்களும் வாரிவாரிவழங்கும் ஆனந்தமான திருத்தலம் திருச்செந்தூர். திருச்செந்தூர் முருகனைத் தரிசித்தும், கந்தர்சஷ்டி விரதம் அனுசரித்தும் இக பரசுகங்கள் யாவும் பெற்று இன்புறுவோமாக!

''ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்!
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்கசீர் அடியார் எல்லாம்.''

★★★

# புதுக்கோட்டை திருக்கோயில்களைச் சார்ந்த விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில் தல வரலாறு

- எஸ். முருகேசன், செயல் அலுவலர், புதுக்கோட்டைத் திருக்கோயில்கள்

எஸ். மைதிலி, பி.லிட்., தமிழ்ப்புலவர்

கற்பதாருவென மெத்திய விராலி
திருவயலில் அடிமைய குடிமையில் அலம்
மயனொரு மலமல அரிய பெரிய திருப்புகழ்
விரும்புமென முன்
அற்புத மெழுந்தருள் குக! விராலிமலை யுரை குரவ!

எனப் புகழ்கொண்ட முருகவேலின் ஞானமூறும் செங்கனி வாயால் பிரணவ ஞான உபதேசம் பெற்றவர்கள் மூவரே, 'தேவ சிரேஷ்டர் சிவபெருமான், முனி சிரேஷ்டர் அகத்தியர், நர சிரேஷ்டர் அருணகிரிநாதர். அருணகிரி வள்ளல் திருப்புகழ் பாடி அஷ்டமாசித்தி பெற்ற தலம் விராலிமலை ஆகும்.

## தலத்தின் இருப்பிடம்

அமிழ்தினும் இனிய தமிழ்க் கடவுளாம் குமரன், முருகன், கந்தன் என்று பக்தர்களால் பல் வேறு பெயர்களால் வணங்கப்படும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமியின் விராலிமலைத் திருக்கோயில் திருச்சி-மதுரை நெடுஞ்சாலையில் திருச்சியில் இருந்து தெற்கே 28 கி.மீ. தொலைவிலும், புதுக்கோட்டையில் இருந்து 40 கி.மீ தொலைவிலும் மணப்பாறையிலிருந்து கிழக்கே 13 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

## இத்திருத்தலம் தோன்றிய வரலாறு

திருச்சிராப்பள்ளியில் இருந்து 6 மைல் தொலைவில் உள்ள வயலூர் என்று ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் கல்வியறிவு இல்லாதவன். அவனைப் பள்ளிச்செல்ல அவன் தந்தை கட்டாயப் படுத்தினார். அவனை அடித்து உதைத்தார். ஆனால் அவன் பள்ளி செல்லாமல் அங்கு குடிகொண்டுள்ள பாலமுருகனின் சிலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். அச்சிறுவன் அங்கு ஒளிந்திருப்பதை அறியாத கோயில் பூஜை செய்யும் குருக்கள் அன்று இரவு கோயில் கதவை எப்பொழுதும் போல் இரவு கால பூஜை முடிந்தவுடன் சன்னதி கதவை சாத்திவிட்டுச் சென்றார். அன்று இரவு முருகன் அச்சிறுவனுக்கு காட்சி கொடுத்து அவனுக்கு ஞானத்தையும் கவிபாடும் திறமையையும் கொடுத்தார். மேலும் அச்சிறுவனை 'ஞான வரோதயா' என்றும் அழைத்தார்.

மறுநாள் காலையில் அவனைக் காணாமல் தேடிய அவன் பெற்றோர்கள் அவன் முருகன் சந்நிதியில் இருப்பதையும், அவன் முகம் மிகவும் பிரகாசத்துடன் விளங்குவதையும் அவனுடைய கவிபாடும் திறமையையும் கண்டு மிகவும் மகிழ்ச்சி கண்டு முருகனின் பேரருளை நினைத்து நினைத்து உள்ளம் பூரித்தனர்.

ஒருநாள் வயலூர் முருகன், பக்தன் 'ஞான வரோதயா' உடன்காட்டுக்கு வேட்டையாடச்சென்றார். அந்தக் காட்டுப் பகுதியில் ஓர் குன்று அழகும், இயற்கை வளமும் நிரம்பப்பெற்று இருந்ததைக் கண்ட வேலவன் அந்த இடம் தனக்கு மிகவும் பிடித்தமாக உள்ளதாகவும், அந்த மலையின் மீது தனக்கு ஓர் ஆலயம் அமைக்குமாறும் 'ஞானவரோதயா'விடம் கூறினார்.

முருகனின் விருப்பத்னைப் பூர்த்தி செய்ய அந்தக் காட்டுப்பகுதியின் தலைவனான அழகிய மணவாளன் என்பவரிடம் தெரிவித்தார். அதற்கு அந்த மணவாளன் தனக்கும் முருகன் காட்சி கொடுத்தால் அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாகக் கூறினார். உடனே ஞான வரோதயன் பாலமுருகன் மீது ஒரு பாடல் பாடியதும் முருகன் அங்கே அழகே வடிவான கண்கள் கூசும் படியான பிரகாசத்துடன் காட்சி கொடுத்தார். பின்னர் அழகிய மணவாளத்தேவர் குறிஞ்சி நிலமாகிய விராலி மலையில் குறிஞ்சி நிலத்தலைவனாக விளங்கும் முருகப்பெருமானுக்கு ஓர் ஆலயம் கட்டினார். இக் கோயிலின் முதல் நிர்வாகியாக ஞான வரோதயாவும், பின்னர் அழகிய மணவாளத்தேவரும் இருந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும். இவ்வாலயத்தில் அழகிய மணவாளன் செய்த திருப்பணிப் பற்றிய பாடல்கள் சில பாடப் பெற்றுள்ளன.

இவர்களுக்குப் பிறகு ஆலயத்தின் மற்றப் பிரகாரங்கள், மண்டபங்கள் குமாரவாடிலக்கையா நாயக்கர்களின் வம்சத்தவர்களாலும், மருங்காபுரியார் வ்கையறாக்களாலும் கட்டப்பட்டது. பின்னர் 19, 20 ம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த புதுக்கோட்டை மன்னர்களால் இவ்வாலயத்தில் நவராத்திரி மண்டபமும்

மணி மண்டபமும் கட்டப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டன.

### கோயில் தோன்றிய காலம்

விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று வரலாற்று உண்மைகள் மூலம் அறியப்படுகின்றது. இக்கோயிலில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயிலின் சுற்றுச்சுவர்கள் கொடும்பாளூர் கோயிலில் உள்ளது போல் இருப்பதால் சோழர்கள் காலத்துக் கோயில் என்று அறியப்படுகின்றது. ஆதித்த சோழன் என்பான் இக்கோயிலுக்கு திருப்பணி செய்து சிறப்பித்தான் என்று இக்கோயிலில் உள்ள கல்வெட்டு மூலம் அறியலாம். அர்த்த மண்டபத்தின் மேல் விதானத்தில் சோழர் கால யாளிச் சின்னங்கள் காணப்படுகின்றன.

### விராலிமலை என்பதற்கான பெயர்க் காரணம்

தவத்தில் சிறந்த முனிவர்கள் இம்மலையில் குராமரங்கள் உருவில் மரங்களோடு விராவியிருந்து சுவாமியை வழிபட்டதால் இம்மலைக்கு விராலி மலை என்று பெயர் உண்டாகி பின் மருவி பேச்சு வழக்கில் விராலிமலை என்றாயிற்று என்பர் சிலர்.

சோலைகளும், மயில்களும், சுனைகளும் மிகுந்த மலைத்தலமாம் இத்தலத்தில் முனிவர்கள் இருமருங்கிலும் மரங்களாகி வழிபடுகின்றனர் என் பதையும் அவர்கள் விரவிய தலமாதலின் விராலி மலை என்றும் திருப்புகழ் பாக்களில் அழகுறக் காட்டுவார் அருணகிரியார்.

மற்றும் ஒரு சாரரார் விராலிச்செடி என்னும் மூலிகைச்செடி இத்தலத்தில் அதிகமாக உள்ளதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர்.

### இத்திருத்தலத்தின் அமைப்பு

ஊரின் நடுவே மலை. 207 படிகளுடன் மலை உச்சியில் சுப்பிரமணியசுவாமிக்குத் தனிக்கோயில். மலையடிவாரத்தின் சிறிதுதூரத்தில் தென்பகுதியில் சரவணப்பொய்கை, கீழ்ப்பாகத்தில் மெய்க்கண்ணுடையாள் சந்நிதி, இங்கு சென்ற பின் தான் மலைக்குச் செல்லவேண்டும்.

மலைமீது செல்லும் வழியில் இடும்பன் சந்நிதி, பாறையைக் குடைந்தமைத்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் சந்நிதி, சந்தானக் கோட்டமும், நவ ராத்திரி மண்டபமும், சண்முகமூர்த்தி மண்டபமும் உள்ளன. சண்முகமூர்த்தி மண்டபத்தின் அருகே காசி விஸ்வநாதருக்கும், விசாலாட்சிக்கும் சந்நிதி உள்ளது. மேற்குப் பிரகாரத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், அருணகிரிநாதர் சந்நிதிகளும், வடக்கில் சண்டிகேஸ்வரர், பைரவர் சந்நிதிகளும் கிழக்கில் காற்றாடி மண்டபமும் அமைந்துள்ளது.

கருவறைக்கு முன்புள்ள மகாமண்டபம் செல்லும் வழியில் நவக்கிரக சந்நிதியும் மேலும் இம்மண்டபத்தில் நடராசர், சிவகாமி, மாணிக்க விநாயகர் ஸ்ரீதேவி பூதேவி உடன் ஸ்ரீனிவாசன் சந்நிதி களும் உள்ளன.

கருவறையில் கருணை வள்ளலாம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆறுமுகங்களுடன் பன்னிரண்டு கரங்களுடன் வள்ளி, தெய்வானையுடன் கல்யாணத் திருக்கோலத்தில் மயில் வாகனத்தில் கருணை பொங்கும் அருட்கண்களுடன் பக்தர்களுக்குக் காட்சி கொடுக் கின்றார். மயிலின் முகம் வடதுபுறமாக அமைந்துள்ளது மிகவும் சிறப்பம்சமாகும். சுவாமியின் வலதுகரத்தில் சூலமும், இடது கரத்தில் வஜ்ராயுதமும் அமைந்துள்ளது மற்றொரு சிறப்பம்சமாகும். மூலவர் போன்று உற்சவரும் வள்ளி, தெய்வானையுடன் காட்சி அளிக்கிறார்.

### வழிபாட்டுமுறையும், திருவிழாக்களும்:

#### வழிபாட்டுமுறை:

இவ்வாலயத்தில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கு காரணாகம விதிமுறைப்படி ஆறுகால பூஜைகளும் மிகச்சிறப்பான முறையில் நடைபெறு கின்றது.

#### திருவிழாக்கள்

சித்திரை மாதத்தில் சித்ரா பௌர்ணமி அன்று சங்காபிஷேகமும், வைகாசி மாதத்தில் விசாகத் திரு விழாவும், மறுநாள் தெப்பத்திருவிழாவும் ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி விழாவும் மாசி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் மகா அபிஷேகமும், பங்குனி மாதத்தில் உத்திரத் திருவிழாவும் கொண்டாடப் படுகிறது.

தை மாதத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு பத்து நாட்கள் திருவிழா கொண்டாடப்படுகிறது. தைப் பூசத்திற்கு முதல் நாள் தேரோட்டமும், தைப்பூசத்தன்று அருள்மிகு சுப்ரமணியசுவாமிக்கு நாகதீர்த்த குளத் தில் தெப்பத் திருவிழாவும் சிறப்பான முறையில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ் வொரு ஆடி மாதமும் மூல நட்சத்திரத்தில் அருண கிரிநாதருக்கு மூன்று நாள் திருவிழாவும் நடைபெறு கிறது.

## தீர்த்தக் குளங்கள்:

### பிரம்ம தீர்த்தம்:

நான்முகனான பிரமன் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியை வழிபட மலைக்குத் தென்புறத்தில் சுனை ஏற்படுத்தி வழிபட்டு வந்துள்ளதால் அச்சுனை பிரம்ம தீர்த்தம் என்று கூறப்படுகிறது. அதைப் பாதுகாக்கும் பொருட்டு சுனைக்கு மேற்புறம் கருப்பர் ஆலயம் உள்ளது.

### நாக தீர்த்தம்:

மலைக்குத் தென்பாகத்தில் ஒரு பர்லாங் தூரத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமியை வழிபட நாகராஜனால் ஏற்படுத்தப்பட்ட குளம் நாகதீர்த்தம் எனப்படும். இன்றும் அத்தீர்த்தத்தில் விசேஷ தினங்களில் அருள்மிகு சுப்ரமணியசுவாமி நீராடித் தெப்பத்தில் பவனிவருகிறார்.

### சரவணப் பொய்கை

பிரம்ம தீர்த்தத்திற்கு கீழ்புறம் திருஊரணி என்ற குளத்தை ஏற்படுத்தி அதனை சரவணப் பொய்கை என்று முன்னோர்கள் கருதி நீராடி இன் புற்றதாகத் தெரிகிறது. தற்போது அது சிதிலமடைந்து தரைமட்டத்திற்குச் சற்றுக் கீழே காணப்படுகிறது.

### சந்தானக்கோட்டத்தின் சிறப்பு

மதியனையும் சோலை யார்த்து
மதிவன சந்தான கோட்டின்
வழியருளின் பேறு காட்டிய விராலி

விராலிமலை பாதிதூரத்தில் உள்ள சந்தானக் கோடு என்னும் புண்ணியதானம் தேவவிருட்சம் ஐந்திலும் ஒன்றாய சந்தான விருட்சம் போல் இட்ட காமியங்களை அன்பர்க்கு அளிக்கும் என்பதை திருப் புகழ் ஆசிரியர் அருணகிரி வள்ளல் திருப்புகழால் காட்டுகிறார்.

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் பெருமைகள்

### புராணப் பெருமைகள்

சரவணப் பொய்கையில் குழந்தையாக வந்த முருகனுக்கு முனிவர்களின் மனைவியரில் வசிட்டரின் மனைவி அருந்ததி பாலூட்ட மறுத்துவிட்டார். அதனால் வசிட்டர் அவளைச் சபித்தார். வீணே அருந்ததியை வசிட்டர் சபித்தது கண்டு முருகன் வசிட்டரைத் தண்டித்தார். பின்பு அருந்ததி, வசிட்டர் ஆகிய இருவரும் விராலி மலை வந்து சாபவிமோசனம் பெற்றனர்.

அரக்கனாம் சூரபன்மாதியரைப் பெற்றெடுத்த பாவம் தீர்க்கும் பொருட்டு காசியப முனிவரும், தன் தங்கையாகிய நான்முகனைத் தண்டித்தற்காகவும் சிவ நிந்தனை செய்த பாவம் போக்க நாரதமுனிவரும் இத்தலத்தில் வந்து அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியை வழிபட்டு உய்வடைந்தனர். இச்செய்திகளை உறுதிப்படுத்தும்வகையில் இங்கு காசியபர், நாரதர், வசிட்டர், அருந்ததி முதலியோருக்கு சிற்பங்கள் உள்ளன. வேறு எங்கும் காணமுடியாதவாறு நாரதருக்கு உற்சவர் சிலை இங்கு உள்ளது சிறப்பம்சம் ஆகும்.

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமியின் அருட்பெருங் கருணைகள்

பாளையக்காரர்களது பிரதிநிதியாக இருந்த கருப்ப முத்துப்பிள்ளை என்பவர் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இவ்வாலயத்திற்குச் சென்று அருள்மிகு சுப்பிரமணியசுவாமியை வழிபடும் வழக்கம் உள்ளவர். ஒருநாள் பெருமழை பெய்து ஏரிக்கரை உடைத்துக் கொண்டது. குமாரவாடிக்கும், விராலிமலைக்கும் நடுவில் இருந்த மாமுண்டி நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. எனவே பிள்ளை அவர்கள் மனிதர்களுடன் தொடர்பு இல்லாமல் தனியே இருந்தார். அவருக்கு உணவு கிடைக்கவில்லை. உணவைவிட அவருக்கு சுருட்டு குடிக்காமல் இருக்கமுடியாது. சுருட்டு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தார். அப்போது சுவாமி அவர் முன்னால் தோன்றி அவருக்கு சுருட்டும் தீக்குச்சியும் அளித்து ஆலயத் திற்குத் தரிசனத்திற்காக அழைத்துச்சென்றார். அன்றிலிருந்து இத்தலத்து சுவாமிக்கு ஆலயத்தில் மற்றப் பிரசாதங்களுடன் சுருட்டும் நைவேத்தியம் செய்யப் பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மன்னர் தொண்டைமான் சுவாமிக்கு சுருட்டு நைவேத்தியம் செய்வது தவறு என்று கூறி அதை நிறுத்திவிட்டார். அதன் பிறகு மன்னர் தீராத வயிற்றுவலியால் அவஸ்தைப்பட்டார். அருள்மிகு சுப்பிரமணியசுவாமி மன்னரின் கனவில் தோன்றி காயமடைந்த தன் உடம்பைக் காட்டி சுருட்டு இல்லாமல் தம்மால் இருக்கமுடியாது என்று கூறி மன்னரின் தீராத வயிற்றுவலியையும் நீக்கி அருளினார். அதன் பின்னர் மன்னரே சுவாமிக்கு நைவேத்தியத்தில் சுருட்டை பிரசாதமாக சேர்க்கும்படி கூறினார். மீண்டும் சுவாமிக்கு சுருட்டு பிரசாதமாக சேர்க்கப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.

மீறுபுகைச் சுற்றேதும்
வேண்டாம் எனும் அரசன்
தேறு கனவு அகவில்
செவுநிரம் காட்டி நின்றான்

என்று கவிராயர் இச்செய்தியை பாடியுள்ளார்.

## அருணகிரியார் பேறு பெற்றமை

எங்கெங்கோ சுற்றி திரிந்து வயலூர் முருகனின் புகழ்பாடி வயலூரில் துயில் கொண்டிருந்த அருண கிரிநாதரை ''விராலிமலை வா'' என வருந்தி அழைத்து அவருக்கு அஷ்டமா சித்திகளை அருணகிரியார் கேட்காமலே அருளிச் செய்தார். நக்கீரர், ஔவையார் போன்ற ஞானியர்களுக்குக் கூட அவர்களாக கேட்ட வரத்தை மட்டும் அளித்தார் முருகன். ஆனால் விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமியோ தானே மனம் விரும்பி வாவென அழைத்து வர மருளிய பேரருளான் ஆவார். அருணகிரிநாதர் கேட்காம லேயே அவரை தன் இருப்பிடமான விராலிமலைக்கு அழைத்தார். முருகனின் திருவுள்ளப்படி வயலூரி லிருந்து அருணகிரிநாதர் விராலிமலைக்கு வரும் பொழுது அடர்ந்த காட்டுப்பகுதி இருந்தது. வயலூரி லிருந்து 13 மைல் தொலைவில் இந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் வழி தெரியாமல் அருணகிரிநாதர் முருகப் பெருமானை எண்ணித் தவிக்கும்பொழுது வேடுவன் உருவில் வந்து வழிகாட்டிய இடம் 'வேலவன் காட்டுப் பட்டி' என்று அழைக்கப்படுகிறது. அருணகிரியா ருடன் அடர்ந்த காட்டுப்பகுதியில் உடன் வந்து விராலிமலைக்கு அருகில் உள்ள சந்தானக்கோட்டம் என்ற இடத்திற்கு வந்தவுடன் தன்னுடைய சுய உருவத்தைக் காட்டி 'அதோ தெரிகிறது பார் விராலி மலை'' என்று கையால் சுட்டிக்காட்டிய இடத்தில் ஒரு பலா மரம் உள்ளது. இன்றும் அந்த மரம் உள்ளது. அந்த மரத்திற்கு மேடை கட்டி மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

மேற்படி பலா மரத்திற்கு நேர் எதிரே புலிகள் வாழக்கூடிய குகை ஒன்று உள்ளது என்று அருண கிரிநாதர் தன்னுடைய திருப்புகழில் 538வது பாடலில் கூறியுள்ளார்.

''புலிநுழை முழையுடைய விராலி''

பிறகு அருணகிரிநாதர் ஒரு குகையின் வழியாக சென்று சுப்பிரமணியசுவாமியை தரிசனம் செய்தார். அவ்வாறு அவர் குகையின் வழி செல்லும்போது குகை மிகவும் இருளடைந்து இருந்தது என்றும், ஆனால் படிகள் போலவே முண்டும் முடிச்சுமாக உள்ளதைப் பற்றி மலைமேல் சேர்ந்ததாகவும் தன் பாடல்களில் பாடியுள்ளார். இந்தக் குகை இன்றும் இங்கே காணப் படுகிறது.

இவ்வாறு அருணகிரிநாதரை வாவென அழைத்து ஞானம் ஊறும் அமுதவாயினால் பிரணவ ஞான உபதேசம் செய்தருளினார்.

வினைதீர்க்கும் விராலிமலை ஞானஸ்தல மாக விளங்குகின்றது. விராலிமலை அருள்மிகு சுப்பிர மணியசுவாமியின் திருவருளால் அஷ்டமா சித்தி பெற்று ஞானமடைந்த அருணகிரிநாதர் இத்தலத்தில் அருளும் பெருமானை 16 திருப்புகழ் பாடல்களால் பாடியுள்ளார். இப்பாடல்கள் அனைத்துமே இம்மை யாகிய பிறவித் துன்பத்தை கடந்து மறுமையாகிய பேரின்பத்தை குறிப்பனவாகும். எனவே ''தான்'' எனும் அகந்தை ஒழிந்து பெருமானே கதி என்று சரணமடைந்தவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே பக்தர்களின் குறை அறிந்து துயர்துடைக்கும் துணைவ னாக - வரமளிக்கும் தெய்வமாக - வினைதீர்க்கும் விராலி மலை நாதனாக அருள்கின்றார். அருணகிரி நாதரை சிற்றின்பத்தில் இருந்து பேரின்பத்தை அடைய சுவாமி அருளிய இடம் இதுவாதலின் இங்கு வரும் பக்தகோடிகள் அனைவரும் இப்பேறு பெறுமாறு அருணகிரிநாதர் சந்நிதி இங்கு அமையப் பெற்றுள்ளது. மேலும் அருணகிரிநாதருக்கு ஒவ்வொரு ஆடிமாதம் மூல நட்சத்திரத்தன்றும் அதனைத் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கும் மொத்தம் மூன்று நாட்கள் திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மேற் படி விழா நாட்களில் அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை சுப்பிரமணியசுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளும் தங்கக்கவசம் சாத்துப்படியும் நடை பெறுகிறது. இவ்விழாவில் வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு முருகன் அருள் பெற்று செல்கின்றனர்.

## நாரதர் உய்வடைந்த வரலாறு

படைக்கும் கடவுளாம் பிரம்மதேவன் ஒரு முறை உலக நாயகனாகிய சிவபெருமானை நிந்தித்த பொழுது கோபம் கொண்ட சிவபெருமான் பிரம்ம தேவனுடைய அகங்காரத்தை அடக்குவதற்காக ஐந்தா வது தலையைக் கிள்ளி எறிந்தார். இதனால் சிவ பெருமானுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. சிவபெருமானுடைய இந்த தோஷம் நிவர்த்தியான இடம் திருச்சி மாவட்டத்திலுள்ள பிச்சாண்டார் கோயில் என்று அழைக்கப்படும் திருக்கரம்பனூர் ஆகும்.

பிரம்மதேவனுடைய ஒரு சிரம் அறுபட்டதால் பிரம்மதேவன் அகங்காரம் ஒழிந்து சிவஸ்துதி செய் தார். ஆனால் பிரம்மதேவனை தண்டித்ததற்காக பிரம்மதேவர் மகனாகிய நாரதமகாமுனி சிவ பெருமானை நிந்தனை செய்தார்.

சிவ நிந்தனை செய்த பாவத்தை போக்கு வதற்காக தகப்பன்சுவாமி என்று அழைக்கப்படும் சுப்பிரமணியசுவாமியை நோக்கி தவம் செய்ய தகுந்



இடம் தேடினார். மரணமில்லா பேரின்ப வீட்டை அளிக்கக்கூடிய ஸ்தலமாகிய விராலிமலை வந்து இங்கு உறையும் அருள்மிகு சுப்ரமணிய சுவாமியை வேண்டி கடுந்தவம் இயற்றினார். சிவபிரானுக்கு பிரணவ உபதேசம் செய்தருளிய அருள்மிகு சுப்ரமணிய சுவாமி மனமிரங்கி நாரதருக்கு வள்ளி, தெய்வானை யுடன் மயில்மீது அமர்ந்தபடி காட்சி கொடுத்து அருளினார். இதனால் நாரதர் பாவ விமோசனம் பெற்றார்.

இவ்வரலாற்றினை நிருபணம் செய்யும் வகை யில் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத படி நாரதர் மகாமுனிக்கு இங்கு உற்சவர் சிலை உள்ளது.

அருள்மிகு நடராஜர் உற்சவம் அன்று அருள் மிகு நடராஜருக்கும் அருள்மிகு சிவகாமிக்கும் நடக்கும் ஊடல் போராட்டத்தில் எல்லா சிவன் கோயில்களிலும் மாணிக்கவாசகர் தூது சென்று சமரசம் செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால் விராலி மலையில் மட்டும் அருள்மிகு நடராசர் சுவாமி ஊடல் போராட்டத்தில் நாரதர் தான் தூது சென்று சமரசம் செய்வது இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது.

## மேலும் சில அருட்செயல்கள்

சுந்தரக் குருக்கள் என்பார் ஊமையாகிப் பின் அருள்மிகு சுப்ரமணிய சுவாமியின் இன்னருளால் மீண்டும் பேசும் சக்தி பெற்றார்.

திருவாரூர் தெட்சிணாமூர்த்தி சுவாமிகளுக்கு சுவாமியே இங்கு நேரில் பிரசாதம் வழங்கிய தல மாகும். அவரது வேண்டுகோளின்படி 35 கல்தூண்கள் கொண்ட ஓர் புது மண்டபம் கட்டப்பெற்றுள்ளது.

சுவாமியின் வாகனமாம் மயில்கள் இத்தளத் தில் மிகுந்து காணப்படுகின்றது. இந்த வருடம் இத் தலத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்துள்ளது. மலை அடி வாரத்தில் வடபுறம் உள்ள மண்டபத்தில் அருகே ஓர் வில்வமரம் காய்ந்த பட்டமரமாகி நின்றது. அந்த மரத் திற்கு நீர்ஊற்றி மரத்தின் கீழ் உள்ள நாகர் சிலை களுக்கு மேடை கட்டிய பின் அந்த பட்டமரம் சுவாமி யின் கருணையினால் மீண்டும் துளித்து பூத்துக் குலுங்கு கின்றது. திருமணம் ஆகாதவர்களும் மக்கட்பேறு இல்லாதவர்களும் இந்த மரத்தினையும், நாகர்களை யும் நம்பிக்கையுடன் பூஜித்து வந்தால் சுவாமியின் அருளால் அவர்கள் வேண்டும் வரம் கிடைக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

## முக்கிய குறிப்புகள்

பல சித்தர்கள் வழிபட்ட தலமாக இத்தலம் சிறப்புற்று விளங்குகிறது. சதாசிவ பிரம்மேந்திரர் வழிபட்ட தலமாம் இத்திருத்தலம். இம்மலையில் பல குகைகள் உள்ளது. பல சித்தர்கள் இங்கு உள்ள தற்கு இக்குகையே சாட்சியாகும்.


''விராலி மலை குறவஞ்சி'' என்ற நூல் இத்தலத்தில் உறையும் சுவாமியைப் பற்றி முத்துப் பழனிக் கவிராயர் என்பவர் நாடகமாக இயற்றி உள்ளார். இவர் விராலிமலையிலேயே வசித்துவந் தார். இந்தக் குறவஞ்சி நாடகம் நாடகக் கலைஞர் களால் கோயிலில் ஆண்டுதோறும் அரங்கேற்றப் படுவது வழக்கமாக இருந்தது.

வேலா விராலி வாழ்வே! சமூக வேதாள பூத
பதிசேயே!
வீரா! கடோர சூராரியே! செவ் வேளா!
சுரேசர் பெருமானே!

## சித்தர்கள் வாசம்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமியின் வாகன மாய் அழகு மயில்கள் நடனமாடும் குறிஞ்சி நிலமாம் அற்புத விராலிமலையில் பல சித்தர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அதற்குச் சாட்சியாக பல குகைகள் இன்றும் விராலிமலையில் காணப்படுகிறது.

திருவாரூர் மடப்புரத்தில் ஜீவிதமாக இருக்கும் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் தன் தவப்பயனால் விராலி



மலை முருகப்பெருமானுக்கு நேரில் அப்பம் வழங்கினார், மகிழ்ச்சியுடன் அப்பம் பெற்றுக்கொண்ட முருகப்பெருமான் அவருக்கு தன் திருக்கரங்களாலேயே விபூதிப் பிரசாதம் வழங்கினார் என்பது வரலாறு. தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் நினைவால் 35 கல் தூண்கள் கொண்ட ஓர் மண்டபம் கட்டப்பட்டுள்ளதாக வரலாற்றில் உள்ளது.

மேலும் இத்திருத்தலத்தில் தெற்குக் குடகு சதாசிவ சுவாமிகள், எச்சில் பொறுக்கி ஆறுமுக சுவாமிகள், சடைச்சாமியார் போன்ற பல சித்தர்கள் வாழ்ந்துவந்தனர்.

தெற்குக் குடகு சதாசிவ சுவாமிகள் கும்பகோணத்தின் அருகிலுள்ள திருபுவனத்தில் ஜீவிதம் அடைந்துள்ளார். இவர் பல சித்து விளையாட்டுகள் நிகழ்த்தி மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளார். தம்மை நாடிவரும் பக்தர்களின் நோய்களை நீக்கி உள்ளதாக செவிவழிச் செய்தி மூலம் உண்மையாகும்.

மேலும் கோட்டையூரில் ஜீவிதம் அடைந்த எச்சில் பொறுக்கி ஆறுமுக சுவாமிகள் விராலிமலையில் பல சித்து விளையாட்டுகள் நிகழ்த்தி உள்ளார். இன்றும் விராலிமலையில் எச்சில் பொறுக்கி ஆறுமுக சுவாமிகள் வாழ்ந்த குகை உள்ளது. இக்குகை யில் சாம்பிராணிதூபம் போட்டு வேண்டிக்கொண்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது அனுபவ பூர்வமான உண்மையாகும்.

மூலிகைகள் பல நிறைந்த இம்மலையில் இதுபோன்ற பல சித்தர்கள் இம்மலைக் குகைகளில் வாழ்ந்து அருள்மிகு சுப்பிரமணியசுவாமியின் திருவருளைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு இருக்கும் குறிஞ்சி நிலக்கடவுள் கலியுக வரதன் என்றெல்லாம் பக்தர்களால் புகழப்படும் விராலிமலை அருள்மிகு வள்ளி, தெய்வானை உடனுறை சுப்பிரமணியசுவாமியை வழிபட்டு மரணமில்லா - மறுபிறவி இல்லாத பேரின்ப வீட்டினை அடைவோமாக!

கர்மவினை தீர்க்கும் விராலி மலை சுப்ரமணியா
போற்றி, போற்றி!

★★★

# தெய்வ வாகனங்கள்

- டாக்டர் டி. செல்வராஜ்

தெய்வங்களுக்கு வாகனங்களாகத் திகழ்பவை தெய்வ வாகனங்கள். இவை தெய்வ அம்சங்கள் நிறைந்தவை; இவற்றைத் தெய்வங்களாகப் போற்றி வழிபடுகின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தெய்வங்களுக்கு வாகனங்கள் இருந்தன. புராணக் கதைகள் பலவற்றில் வாகனங்கள் குறிப்பிடப்படு கின்றன. இறைவனிடம் கனியைப்பெறுவதற்காக, முருகன் மயில் வாகனத்தில் ஏறி, உலகை வலம் வந்த வரலாறு அனைவரும் அறிந்ததே. இதில் மயில் வாகனம் குறிக்கப்பட்டது.

பழங்கால மக்கள் பயணம் முதலியவற்றிற்குப் பல வாகனங்களைப் பயன்படுத்தினர். பின்னர், அவர்கள் வணங்கிய தெய்வங்களையும், பல வாகனங் களுடன் இணைத்து வழிபட்டனர். அவர்கள் நாகம், புலி, சிங்கம், யானை முதலிய உயிரினங்களைக் கண்டு அஞ்சினர். அந்த உயிரினங்களைத் தெய்வங் களுக்கு வாகனங்களாக மாற்றிச் சிறப்பித்துப் போற்றினர். தெய்வங்கள் அந்த உயிரின வாகனங்களை அடக்கி ஆளுகின்றனர். ஆகவே, அந்தக் கொடூரமான உயிரினங்களால் அவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங் கள் தணிந்து குறைந்துவிடும் என்று நம்பினர். இவ் வாறு தெய்வங்களுக்கு வாகனங்கள் அமைந்தன எனலாம்.

மேலும், மிக அழகான பறவைகளையும், விலங்குகளையும் தெய்வங்களுக்கு வாகனங்களாக அமைத்து மகிழ்ந்தனர். முருகனின் வாகனமான மயிலும், துர்க்கையின் வாகனமான மானும் மிக்க அழகின் காரணமாக, தெய்வங்களுக்கு அவை வாகனங் களாகும் தகுதியைப் பெற்றன.

எனவே, தெய்வ வாகனங்களின் தகுதிகள் இரண்டு. அவை 1. கொடூரம் (2) அழகு. பெரும்பாலான வாகனங்கள் இந்த இரு பிரிவுகளில் அடங்குகின்றன.

## தெய்வங்களின் பெயர்கள்

தெய்வங்களின் பெயர்கள் சிலவற்றை அவர் களது வாகனங்களின் பெயர்களுடன் சார்த்தி வழங்கு கின்றனர். மூஷிக வாகனன், மயில் வாகனன், இட பாரூடர், இடபாந்தகர், காளையார், சிம்ம வாகினி, அன்ன காமு (அன்னம் விரும்புகின்றவன் - பிரமன்) முதலியன. இத்தகைய பெயர்களைக் கவனிக்கின்ற போது, வாகனங்களுக்குப் பெருமையைச் சேர்க்கின்ற போக்கில் அவை அமைந்திருப்பதைக் காணலாம்.

## வாகனங்கள் அமையக் காரணங்கள்

அ) புராணக்கதைகள் பலவற்றைக் காணுகின்ற போது, வாகனங்களைப் பற்றிய ஓர் உண்மை புலனாகின்றது. அதாவது, அசுரர்கள் முத லானோர் தெய்வங்களை எதிர்க்கின்றனர். ஆணவ வெறியுடன், பல உருவங்களை மேற் கொண்டு, ஆவேசத்துடன் போரிடுகின்றனர். இறுதியில், ஆணவம் ஒடுங்கி, ஆவேசம் அடங்கி அத் தெய்வங்களின் வாகனங்களாகப் பணிந்து கிடக்கின்றனர்.

கஜமுகாசுரன் விநாயகரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றான். முடிவில் மூஷிக வாகனமானான்.

முருகனுடன் போரிட்ட சூரபத்மன், அவனுக்கு மயில் வாகனமானான்.

ஆ) சிலர் விரும்பி அல்லது தவம் செய்து தெய்வங் களுக்கு வாகனங்களாகி மகிழ்கின்றனர். தரும தேவதை, சிவபெருமானை வேண்டிக் காளை வாகனமாயிற்று. சிங்கன் அம்பிகையின் வாகன மாக விரும்பித் தவம் செய்தான்; சிங்க வாகன மாக அமைந்தான்.

இ) பந்தள நாட்டு அரசன் மணிகண்டனை (ஐயப்பனை) வளர்த்தான். மணிகண்டனை அரண்மனையிலிருந்து தந்திரமாக வெளியேற்ற அரசி, அமைச்சருடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தாள். தன் மகனே அரசாள வேண்டும் என்பது அரசி யின் எண்ணம். அமைச்சரின் ஆலோசனைப்படி ஒரு மருத்துவர், அரசிக்குத்தலை வலி என்றும், அதை அகற்றப்புலிப்பாலுடன் கலந்த மருந்து தேவைப்படுகின்றது என்றும் கூறினார். மணி கண்டன் தாயின் தலைவலியைத் தீர்க்கப் புலிப் பாலைக் கொண்டு வருவதற்காகக் காட்டுக்குச் சென்றான். ஒரு புலியின் மீதேறி, புலிக்கூட்டத் துடன் பந்தளத்திற்கு மீண்டான். அன்று முதல் புலி ஐயப்பனின் (மணிகண்டனின்) வாகன மாயிற்று. இது புராணவரலாறு ஆகும்.

ஒவ்வொரு வாகனத்தின் பின்னணியில் சுவையான புராண வரலாற்றுக்கதை இருப்பது, மேற்கண்டவற்றால் புலனாகின்றது.

### விநாயகர்

விநாயகருக்கு முப்பத்திரண்டு வகைப்பட்ட திருமேனிகள் உள்ளன. இவைகளில், விசய விநாயகரும், சிருஷ்டி விநாயகரும் பெருச்சாளி வாகனத்துடன் காட்சி தருகின்றனர். மற்றும், பீடம் அல்லது மலர்ப்பீடத்தின் அருகில் பெருச்சாளி அல்லது மூஞ்சூறு இருப்பதை மற்ற திருமேனிகள் பலவற்றில் காண முடியும்.

### சிங்கம்

சிங்கம் விநாயகருக்கும், ஏரம்ப விநாயகருக்கும் உரிய வாகனம் சிங்கம். இது பார்வதியின் வாகனம். மகன் விநாயகர் பெற்றுக் கொண்டார்.

### காளை

காளை வாகன விநாயகர் சுசீந்திரத்தில் எழுந்தருளியுள்ளார். சிவபெருமானின் முக்கண், பிறை, காளை வாகனம் என்ற மூன்றும் விநாயகரிடமும் உண்டு.

### யானை

யானை வாகன விநாயகர் இருப்பிடம் : ஸ்ரீவில்லிபுத்தூர் வைத்திய நாத சாமி கோயில். யானை முகத்தவனுக்கு யானையும் ஒரு வாகனம். இதை அடக்க அங்குசமும், பாசமும் இவரது கைகளில் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | மயில் வாகன விநாயகர் | - திருவானைக்கா (ஓவியம்) |
| 2) | குதிரை வாகன விநாயகர் | - சென்னப்ப நாயக்கன் பாளையம் மலை யாண்டவர் விநாயகர் கோயில் |
| 3) | நாக வாகன விநாயகர் | - திருவாரூர் |
| 4) | பூத வாகன விநாயகர் | - திருப்பரங்குன்றம் சொக்கநாதர் கோயில். |

### உட்பொருள்

பொதுவாக, தெய்வத்தைப் பரம்பொருள் என்றும், அவரது வாகனத்தை, அவரிடம் ஒன்றிய, அல்லது அடங்கிய அல்லது சரணாகதியான 'உயிர்' என்றும் கூறலாம். வாகனம் = பக்குவப்பட்ட உயிர் என்பது எல்லா வாகனங்களுக்கும் பொருந்தும்.

விநாயகர் வலிமையானவர்; தோற்றத்தால் பெரியவர். மூஞ்சூறு மென்மையானது; சிறியது. தாங்குகின்ற மூஞ்சூறு என்ற வாகனமும் அவரே; தாங்கப்படுகின்ற விநாயகர் என்ற பரம் பொருளும் அவரே. மற்றொரு விளக்கம்:-

| | | |
|---|---|---|
| விநாயகர் | - | ஞானப்பேரொளி |
| மூஞ்சூறு | - | அஞ்ஞானம் அல்லது அடக்கப்பட்ட ஆணவம் |

### முருகன்

யானையும், மயிலும், முருகனது முக்கியமான, சிறந்த வாகனங்கள் ஆகும். மற்ற வாகனங்கள் சேவல், ஆடு என்பன.

### யானை

குமார தந்திரம் என்ற நூலில், முருகனுக்கு உரிய பதினாறு திருமேனிகள் வருணிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கஜவாகனர், சிகி (மயில்) வாகனர் என்ற இரு திருமேனிகளும் வாகனங்களுடன் விளங்குகின்றன.

முருகனின் 'பழைய' வாகனம் யானை. திருத்தணி, சுவாமி மலை, உத்தர மேரூர், ஆனூர் முதலிய தலங்களில் யானை வாகனத்தைத் தரிசிக்கலாம். கஜவாகனர் - இருப்பிடம் சிதம்பரம்

### மயில்

கடலும், ஆகாயமும் நீல நிறம் கொண்டவை. மயிலும் நீல நிறத்தை முதன்மையாகக் கொண்ட பல வண்ணங்களையுடையது. எங்கும் வரம்பில்லாமல் பரந்துள்ள நிறம் நீலம். நீல மயில் எல்லையற்ற பரம்பொருளான முருகனுக்கு வாகனமாக இருப்பது மிகப் பொருத்தமே.

சூரன், பத்மன் என்ற இருவரது இணைந்த வடிவம் சூரபத்மன். ஆகவே, முருகன் சூரபத்மனை இரண்டு கூறுகளாகப் பிளந்தான். ஒரு கூறு சேவலாயிற்று; இதனைக் கொடியாக ஏற்றருளினான். மறு கூறு மயிலாயிற்று; இதுவே முருகனது வாகனம்.

முருகன் சூரனை வதைத்து, அவனைத் தன்னைப்போல ஒரு தெய்வமாக்கினான். ''வேலும், மயிலும் துணை'' என்பர். வேல் - முருகன்; மயில் - சூரன். துணை புரிவதில் இருவரும் சமம். தெய்வத்தின் பகைவன் ஒருவனுக்குக்கிடைத்த இத்தகைய பெரும்

பேறு, வேறு எவருக்கும் இல்லை. பகைவனுக்கும் அருளுகின்றவன் முருகன்.

### சிகிவாகனர்

மயிலை வாகனமாகக் கொண்ட முருகன் 'சிகிவாகனர்.'

மேலும், முருகனது பதினாறு திருமேனிகளில் கார்த்திகேயன், கிரௌஞ்ச பேதனன் என்ற இரு திருமேனிகளிலும் மயில் வாகனத்தைக் காணலாம்.

மயிலின் தலை, முருகனது வலப்பக்கத்தில் இருந்தால், அது 'தேவமயில்'; இடப்பக்கத்தில் இருந்தால், அது 'அசுரமயில்' என்று கூறுவது வழக்கம்.

மிக அழகான மயில் வாகனம் இருக்கும் திருத்தலம் - சிறுவாபுரி (சின்னம்பேடு). திருப்புகழ் பாடல்பெற்ற தொண்டை மண்டலத் திருத்தலம் இது. பொன்னேரிக்கு அருகில் உள்ளது.

எண்கண் திருத்தலத்திலுள்ள மயில்வாகனமும் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. திருவாசி, முருகன், மயில் வாகனம் என்ற மூன்றின் பாரத்தையும், அந்த மயிலின் இரு சிறு கால்களே தாங்குவது அற்புதம்.

### உட்பொருள்

தோகை விரித்த மயில் ஓங்கார அமைப்புடையது. அதில் வீற்றிருக்கின்ற முருகன் ஓங்கார முருகன்; பிரணவ மூர்த்தி.

சிதம்பர சுவாமிகள் ''சால விந்து எனும் தடமா மயிலாய்'' என்று அழைத்தார். சுத்த மாயையாகிய 'விந்து' என்ற தத்துவமே முருகனது மயில் வாகனமாக அமைந்தது.

மயிலின் வாயில் படமெடுத்து நெளிகின்ற பாம்பு சுருண்டு கிடைப்பதைப் போன்று சிலை வடிக்கின்றனர். சில போது அப்பாம்பு மயிலின் காலடியில் மிதிபட்டுக்கிடக்கும்.

பாம்பு - பாசம்
மயில் - பசு அல்லது உயிர்
முருகன் - பதி அல்லது பரம்பொருள்

என்பது ஓர் உட்பொருள் விளக்கம். இனி மற்றொரு விளக்கம்:-

பாம்பு - சக்தி
மயில் - மகா சக்தி
முருகன் - எல்லையற்ற சக்தி

மயில் வாகனத்தைப் பற்றிய உட்பொருள்கள் இவ்வாறே மேலும் சில உள்ளன.

### சிங்கம்; பாம்பு

முருகன், சிங்க வாகனத்துடன் சென்னி மலையிலும், பாம்பு வாகனத்துடன் காஞ்சி குமரக் கோட்டத்திலும் தோற்றமளிக்கின்றான்.

### பல வாகனங்கள்

ஒரு தெய்வத்துக்கு ஒரு வாகனம் இருப்பது பொருத்தம். ஆனால், ஒரு தெய்வத்திற்குப் பல வாகனங்கள் இருக்கின்றன. ஒரு தெய்வத்துக்குரிய வாகனத்தை மற்றொரு தெய்வத்துக்குரிய வாகனமாக மாற்றி, ஒரு புதுத்திருமேனியை உருவாக்குகின்றனர். உதாரணமாக, பார்வதியின் வாகனமான சிங்கம், விநாயகருக்கும், முருகனுக்கும் வாகனமாக விளங்குகின்றது என்பதை மேலே கண்டோம். ஆகவே, புதுப்புது கோல வடிவங்களுடன், பலப்பல வாகனத்திருமேனிகள், தனித்தனி பொலிவுடன் தோன்றுகின்றன. பக்தர்கள், தாம் விரும்புகின்ற வாகனத்துடன் கூடிய, குறிப்பிட்ட தெய்வத்திருமேனியைத் தேர்ந்து வழிபடுகின்றனர். ஒரு வாகனம் பல தெய்வங்களுக்கு உள்ளது. அதைப் போல ஒரு தெய்வத்திற்குப் பல வாகனங்கள் உள்ளன.

### சிவபெருமான்

சிவபெருமானுக்குரியது காளை வாகனம். இவரது சிறந்த மூர்த்தங்கள் இருபத்தைந்து. இவற்றுள் ''இடபாரூடர்'' என்ற மூர்த்தத்தில் மட்டும், இறைவன் இடப வாகனத்தில் எழுந்தருளித்தரிசனம் தருகின்றார். பக்தர்களின் கனவில் தோன்றுபவரும், நேரில் தரிசனம் தருகின்றவரும் இவரே. நாயன்மார்களுக்குத் திருக்காட்சி தந்த இறைவன் இடபாரூடர் வடிவத்தில் தோன்றினார் என்பதைப் பெரிய புராணத்தால் அறியலாம்.

### இடபாரூடர்

இடபம் இறைவனது வாகனமாக அமைந்ததற்குப் புராண வரலாறுகள் இரண்டு உள்ளன.

1. இறைவன் திரிபுரத்து அசுரர்களை அழிக்கப் புறப்பட்டார். அப்போது பூமியாகிய தேரின்மீது ஏறினார். சந்திரனும், சூரியனும் அதன் இரு சக்கரங்களாயின. இவர், போருக்குப் புறப்படும்போது முதன் முதல் விநாயகரை வழிபட வேண்டும்; வழிபடவில்லை. எனவே, இவரது தேரின் அச்சு முறிந்தது. அப்போது, விஷ்ணு, இடப வடிவெடுத்து இறைவனைத் தாங்கினார். இந்த அமைப்பே இடபாரூடர் மூர்த்தம்.

2. ஊழிக்காலம் கடந்த பிறகு, என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று நினைத்தது தரும தேவதை. இறைவனிடம் வரம் பெற்று இடப வாகனமாக நிலைத்தது. இது ''தர்மவிடை''. தூய வெள்ளை நிறமானது; இதன் கால்கள் நான்கும், நான்கு வேதங்களாம். இடபாரூடர் மூர்த்தமிருக்கின்ற ஒரு தலம் மதுரை. இதன் அருகில் விராதனூரில் மூலவராகத் திகழ்கின்றார் இவர்.

### இடபாந்தகன்

இடப + அந்தகன் = இடபத்தைப் பாதுகாப்பவன். இறைவனுக்குரிய, இடபவாகனமுடைய மூர்த்தங்களில் இது மற்றொன்று. இறைவனின் பின்னால் இடபம் நிற்கின்றது. இவர் வலக்கையை இடபத்தின் தலை மீது வைத்து, அதற்கு அருள்புரிகின்ற பாவனையில் அமைந்த மூர்த்தமே 'இடபாந்தகர்'. இவரைத் திருமழிசையில் காணலாம். சிவப்பராக்கிரமம் குறிக்கின்ற மூர்த்தம் இது.

உட்பொருள் : *தர்ம விடை:* இறைவனைப் போலத் தர்மம் நிலைத்தது. இறைவனோடு என்றும் திகழ்கின்றது.

**விஷ்ணுவிடை :** ''அரியும் சிவனும் ஒண்ணு'' என்ற உட்பொருளையும், இரு சமய இணக்கத்தையும் உணர்த்துகின்றது. மற்றோர் உட்பொருள்:

1. இறைவன் - அருள் வடிவம்
2. இறைவி - சக்தி வடிவம்
3. இடபம் - தர்ம வடிவம்

### விஷ்ணு பெருமான் :

விஷ்ணு பெருமானின் வாகனம் கருடன். ஆதிசேஷன் என்ற திருவனந்தாழ்வான் மற்றொரு வாகனம். இவன் வாகனம் மட்டுமா? ''திருவனந்தாழ்வான், பெருமாள் நடந்து சென்றால் குடையாவான்; இருந்தால் சிம்மாசனம் ஆவான்; நின்றால் அவரது பாதுகையாவான்; படுத்தால் புணை ஆவான்; மங்கல விளக்காவான்; பூம்பட்டாவான்; அவர் தழுவிக் கொள்ளும் அணையும் ஆவான்'' என்று திருவனந்தாழ்வானைப் போற்றுகின்றார், பொய்கையாழ்வார். வாகனத்தைப் பற்றிய அருமையான பாடல் இது.

### வாகனங்களின் ஒற்றுமை

விஷ்ணுவின் வாகனங்களான கருடனும், சேஷனும் பகையுடையன. அம்பாளது சிங்கம், சிவனது காளையைப் பற்ற முடியும்.

விநாயகரின் மூஞ்சூறு சிவனது கழுத்தைச் சுற்றியிருக்கின்ற பாம்பைக்கண்டு பயப்படும். இதே பாம்பு, முருகனது மயிலைப் பார்த்து அஞ்சத்தான் வேண்டும்.

இவ்வாறு, பகைமையால் முரண்பட்ட வாகனங்கள் தெய்வங்களின் திருமுன் ஒற்றுமையுடன் விளங்குகின்றன. தெய்வங்களை வணங்குகின்றபோது அகப்பகையோ, புறப்பகையோ அறவே இருக்கக் கூடாது என்ற அடிப்படைத் தத்துவத்தை அவை புலப்படுத்துகின்றன.

### பொருத்தமான வாகனங்கள்

தெய்வங்களுக்கு மிகப் பொருத்தமான வாகனங்கள் அமைந்துள்ளன. சில உதாரணங்கள் வருமாறு

1. முருகன் - அழகன் - மயில்
2. மன்மதன் - நிலைத்த பசுமையான அழகு - கிளி
3. பிரமன்; - வெண்மை நிறம் - அன்னம் சரஸ்வதி
4. சனீஸ்வரன் - கருமை நிறம் - காக்கை
5. காளி - ஆவேச வடிவம் - சிங்கம்
6. தேவி - கம்பீர வடிவம் - புலி
7. இந்திரன் - பெருமித வடிவம் - யானை

### பெண் தெய்வங்களும் வாகனங்களும்

பெண் தெய்வங்களில் இலக்குமி, சரஸ்வதி முதலான தெய்வங்களின் தோற்றங்கள் சாந்தமானவை. இவர்களது திருமுகங்கள் புன்னகை பூத்த பொலிவுடன், பக்தர்களின் மனங்களைக் கவர்ந்து கனிய வைக்கும் ஆற்றலுடையவை. முறையே செந்தாமரையும், வெண்தாமரையும் இவர்களுக்கு ஏற்ற மலர்ப் பீடங்களே. சரஸ்வதியின் வாகனங்கள் மயில், அன்னம் திருமேனியில் சாந்தமும் அழகும் இணைந்தன.

மாறாக, பெண்தெய்வங்கள் சிலருக்கோ கொடூரமான விலங்குகளே வாகனங்களாக உள்ளன. அவர்களது கோபம், ஆவேசம் முதலிய உணர்ச்சிகளை வாகனங்களும் எதிரொலிக்கின்றன. இவர்களது உக்கிரமான தோற்றம், பக்தர்களின் மனத்தில் பய உணர்வுகளை உருவாக்குகின்றது. அவற்றை

வாகனங்கள் மேலும் அதிகப்படுத்துகின்றன. பெண் தெய்வங்களின் பாவனைகளை வெளிப்படுத்துகின்ற கருவிகளாக வாகனங்கள் உள்ளன எனலாம்.

**வாகனங்களின் நோக்கு நிலைகள்:**

தெய்வம் வாகனத்தின்மீது அமர்ந்திருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. வாகனம் அவரது பின்பக்கத்திலும், அருகிலும், திருவடிக்கீழும் இருப்பதைப்பல மூர்த்தங்களில் காணமுடியும்.

**அ. நின்ற நிலை** வாகனம் நின்ற நிலையில் இருப்பதே முறை. அது இறைவனைத்தாங்கி நிற்கின்ற போது, அதன் தோற்றத்தில் பெருமிதமும், கம்பீரமும், மிடுக்கும், பொலிவும் கலந்து இருக்கின்றன.

**ஆ. அமர்ந்த நிலை** வாகனங்கள் அமர்ந்த நிலையில் அமைந்த மூர்த்தங்களும் பல இருக்கின்றன. உதாரணம் - நந்தி.

**அ. வலம்:** தெய்வத்தின் வலதுபக்கத்தில் வாகனத்தின் தலை அமைந்திருப்பது சிறப்பானது. இந்த அமைப்பை மிகப்பெரும்பாலான சிலைகளிலும், ஓவியங்களிலும் காணலாம்.

**ஆ. இடம்:** வாகனத்தின் தலை தெய்வத்தின் இடப்பக்கத்தில் இருப்பது சிறுபான்மையாம்.

**இ. நேர்முகம்:** வாகனத்தில் தலை பக்தர்களைப் பார்த்தபடி, நேர்முக நோக்கில் அமைந்திருப்பது மற்றொரு முறை. இந்த அமைப்பில் வாகனத்தின் உடற்பகுதி தோற்றமளிக்காமல் தலைப்பகுதிமட்டும் முழுக்காட்சி தருகின்றது. இக்காட்சி தெய்வம், வாகனத்தின் மேலேறிப்பக்தர்களை நோக்கி வருவதைப் போன்ற உணர்வைப் பக்தர்களின் மனத்தில் உருவாக்குகின்றது. அதோ முருகன் யானை மீதமர்ந்து வருகின்ற அழகிய, கம்பீரமான தோற்றம்! இதோ ஸ்ரீஐயப்பன் புலிமீதேறி வருகின்றான்! வாகனங்களின் நேர்முகத் தோற்றத்தின் அழகே அழகு.

இவ்வாறு, வாகனங்களின் நேர்முகத் தோற்றத்தில் உயிர்த்துடிப்புடைய ஒரு தனிப்பொலிவு இருக்கின்றது. எனவே, வாகனங்களின் பக்கத் தோற்றங்களைவிட நேர்முகத்தோற்றத்தில் மிக்க அழகு மிளிர்கின்றது என்று கூறுவதில் தவறில்லை.

**பார்வைகள்**

சில வாகனங்கள் தெய்வங்களை எப்போதும் உற்றுநோக்கியபடி உள்ளன. இந்த அமைப்பிலும் ஆன்மீக நுட்பங்கள் சில உண்டு. இவற்றை இரண்டு உதாரணங்களால் விளக்கலாம்.

1. பெருச்சாளி அல்லது மூஞ்சூறு விநாயகரின் முன் வைக்கப்பட்டுள்ள பலகார அல்லது பழத்தட்டை நோக்குவதில்லை. அவற்றை வெறுத்து ஒதுக்கிவிட்டு, விநாயகரை ஏக்கத்துடன் உற்று நோக்குகின்றது. உண்மைதான். அதற்கு மிகச்சுவையான இவ்வுலகச் சிற்றின்பங்கள் தேவையில்லையாம். விநாயகர் அருளுகின்ற மிக அரிய சுவையான பேரின்பமே வேண்டுமாம். பெருச்சாளியால், சிற்றின்பத்தை ஒதுக்கிப் பேரின்பத்தை அடைவதற்குரிய வழியைப் பக்தர்களுக்குத் தமது கண்களால் காட்டுகின்றார். பேரின்பத்தை அடைய விநாயகரை இடையறாமல் வழிபட வேண்டும். பெருச்சாளியின் கண்பார்வை இதனை உணர்த்துகின்றது.

2. சரஸ்வதியை எப்போதும் நோக்கியபடி இருக்கின்றது மயில். ஆறுகடலையே நோக்கும்; தாமரை சூரியனையே நோக்கும்; வாகனம் தெய்வத்தையே நோக்கும். உயிரும் எப்போதும் தெய்வத்தையே நோக்கவேண்டும்; அதை நோக்கியபடி முன்னேறிச் செல்லவேண்டும். இந்தக்கருத்தை மயிலினது நோக்கம் நுட்பமாக உணர்த்துகின்றது.

வாகனங்களின் நோக்குநிலைகளில் பல நுட்பங்கள் பொதிந்துள்ளன என்பதை இவற்றால் உணரலாம். வாகனங்கள் வெறும் வாகனங்கள் அல்ல; அவை நுட்பமான கருத்துகளை உணர்த்தும் சின்னங்கள் ஆகும்.

**கோயில்களில் வாகனங்கள்**

கோயில்களில் மூலவர்களுக்கு நேர்முன், அவர்களது வாகனங்களைப் பிரதிட்டை செய்ய வேண்டும் என்பது விதி. லிங்கம் - நந்தி, பெருமாள் - கருடன்; முருகன் - மயில் முதலியன. உயிர் எப்போதும் இறைவனையே நோக்க வேண்டும் என்ற மேற்கண்ட தத்துவத்தையே இந்த வாகனங்களும் தெரிவிக்கின்றன. மூலவர் - பதி : வாகனம் - பசு; பலி பீடம் - பாசம் என்பன சாத்திரங்கள் தருகின்ற விளக்கம்.

**முதல் வணக்கம்**

வாகனங்களுக்குக் கோயில்களில் தனி மண்டபங்களும், சில கோயில்களில் தனிச்சன்னதிகளும் இருக்கின்றன. வாகனங்களைவணங்கி, வேண்டி, அவர்களிடம் அனுமதி பெற்றபிறகே மூலவரைத் தரிசிக்கச் செல்வது கோயில் வழிபாட்டுமுறையாகும். ஆகவே, கோயில் வழிபாட்டில் முதல் வணக்கத்திற்கும், முதல் வழிபாட்டிற்கும் உரியவை வாகனங்களே.

## வலம் வரல்

மூலவரைத்தனியே வலம்வரக் கூடாது. வாகனத்தைத் தனியே வலம் வரக்கூடாது. ஒருங்கே வலம்வர வேண்டும். இதுவே முறை.

மூலவருக்கும், வாகனத்திற்கும் நடுவில் நின்று வழிபடக்கூடாது; குறுக்கே நடக்கக்கூடாது.

## நிவேதனம்

மூலவருக்குப் படைக்கப்படுகின்ற நைவேதியங்கள், அவர்களது வாகனங்களுக்கும் படைக்கப்படுகின்றன. திருவரங்கம் பெருமாள் ஆலயத்தில் இரவுபூசையின்போது வாகனங்களுக்கும் நிவேதனம் செய்கின்றனர்.

சில தலங்களில் வாகனங்களுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பிரதோஷ காலத்தில் நந்தி வழிபாடு மிக முக்கியமானது. நந்தி வழிபாட்டிற்குச் சிறந்த தலம் திருவாவடுதுறை. தெய்வங்களுக்குரிய வழிபாடுகள் வாகனங்களுக்கும் உண்டு.

## அடையாளம்

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நிலப்பரப்பில் ஒரு பழைய சிலை கிடைத்தது. இது எந்தத் தெய்வத்தின் சிலை வடிவம் என்பது சீக்கிரத்தில் புலனாகவில்லை. குழப்பம். சிலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எருமையின் தலைவடிவம் மங்கலாகத் தெரிந்தது. உடனே, அத்தெய்வம், எருமை வாகனத்துடன் இருக்கும் எமனது வடிவம் என்று முடிவாயிற்று. ஆகவே, வாகனத்தைக்கண்டு, சிலை வடிவில் அமைந்த தெய்வத்தை தெளிவு படுத்திக் காணமுடியும். நாய் வாகனத்துடன் நிற்கின்ற தெய்வமா? அவர் பைரவர். காக்கை வாகனம் உள்ளதா? அந்த வாகனத்துடன் இருக்கின்ற தெய்வம் சனீஸ்வரர். தெய்வங்களைத் தெரிந்துகொள்வதற்கு கொடிகளில் அடையாள இலச்சினைகளாக அமைந்தவை அவர்களது வாகனங்களே.

## உயிரின வாகன வழிபாடு

தெய்வ வாகனங்களுக்குப் பக்தர்கள் துன்பங்களைத் தருவதில்லை. அவற்றைத் தரிசித்தும், வணங்கியும், வழிபட்டும் மகிழ்கின்றனர்.

சிலர் மூஞ்சூறுகளைத் துன்புறுத்தமாட்டார்கள்.

கருடனைத் தரிசித்தால், பெருமாளைத் தரிசித்ததாகவே நினைந்து பக்தியுடன் வணங்குகின்றனர். யானைத்தரிசனம், விநாயகர் தரிசனத்திற்கும், இலக்குமி தரிசனத்திற்கும் சமமாகும்.

தமிழகத்தின் சில பகுதிகளில் காளைமாடுகளை ஏர்களில் பூட்டமாட்டார்கள்.

சிலர், நாள்தோறும் காலை வேளைகளில் அல்லது சனிக்கிழமைகளில் காக்கைளுக்கு உணவுப் பொருள்களைப் படைக்கின்றனர்.

மேற்கண்டவை அனைத்தும் தெய்வ வாகனங்களுக்குப் பக்தர்கள் தருகின்ற ஏற்றமாம். இவை தெய்வங்களுக்குரிய வாகனங்களாக இருப்பதால் வழிபாட்டுக்குரிய தகுதியைப் பெறுகின்றன. வாகனங்களைத் தனியாகவும், தெய்வங்களோடும் வழிபடுகின்றோம். மற்றும், அவை உயிரோடும், சிலை வடிவிலும் இருந்தாலும் வணங்குகின்றோம்.

## மனித, அசுர, தெய்வ வாகனங்கள்

மனிதனும், விலங்கும் இணைந்த வடிவம் புருஷாமிருகம். இது ஒரு வாகனம். (மயிலை; காஞ்சிபுரம்)

கைலாய மலையைத் தூக்குகின்றான் இராவணன். இந்த அமைப்பில் ஒரு வாகனம் உள்ளது. (மயிலை, காஞ்சிபுரம்)

எமனும் வாஞ்சி நாதருக்கும் ஒரு வாகனம் ஆவான். (திருவாஞ்சியம்). எமனுக்கு வாகனம் எருமை! ஒரு வாகனத்திற்கு மற்றொரு வாகனம் இருக்கின்றதே!


இப்படி மனித, அசுர, தெய்வ வடிவங்களும் வாகனங்களாகத் திகழ்கின்றன. நிருதிக்குப்பூதம் ஒரு வாகனம்.

## உட்பொருள்

அளவற்ற ஆற்றல்களுக்கும் அப்பாற்பட்டவன் ஆண்டவன். அவனது ஆற்றல்களுக்கு ஒரு வரம்பில்லை. அனைத்தும் அவனுக்கு அடங்கியவை.

திருவிழாக்களில் வாகனங்கள்: திருவிழாக்கில், தெய்வங்கள் வாகனங்களில் எழுந்தருளி உலா வருகின்றனர். முக்கியமானவாகனங்கள்பல, வருமாறு:

**சிவபெருமான்:** 1. விருட்சம்(ஆக்கல்) 2. சந்திர சூரியப்பிரபைகள் (காத்தல்) 3. நந்தி (அழித்தல்) 4. நாகம் (மறைத்தல்) 5. இடபம் ( அருளல்) 6. பூதம் 7. பல்லக்கு 8. கைலை மலையைத்தூக்கிய இராவணன் 9. குதிரை 10. யானை முதலியன.



**விஷ்ணுப்பெருமான்:** 1. புன்னைமரம் 2. சந்திர சூரியப்பிரபைகள் 3. கருடன் 4. ஆதிசேடன் 5. சிங்கம் 6. அன்னம் 7. பல்லக்கு 8. குதிரை 9. யானை முதலியன.

**உட்பொருள்:** சிவபெருமானது வாகனங்கள், அவனது ஐந்து தொழில்களையும் உணர்த்துகின்றன என்பர். திருவிழாவின் பத்தாம் நாளன்று எழுந்தருளுகின்ற நடராசர் ஐந்து தொழில்களையும் ஒருங்கே செய்கின்றவர்.

**இலக்கியங்கள்:** தெய்வ வாகனங்களைப் பற்றிய பக்திப்பாடல்கள் பல உள்ளன. அருணகிரிநாதர் கந்தரலங்காரத்திலும் (பாடல் 72, 96) திருப்புகழின் பல இடங்களிலும் மயிலைப்போற்றினார். தெய்வ வாகனத்தைப் போற்றுகின்ற முதல் நூல், சுவாமிகள் அருளிய 'மயில் விருத்தம்'. தொடர்ந்து தண்டபாணி சுவாமிகள் 'மயில் அலங்காரம்' என்ற நூலை இயற்றினார். இவற்றைப் பாராயணம் செய்து வழி படலாம்.

### யானை

ஞான வடிவான யானையை, அருணகிரிநாதர் 'திருஞான வேழவகுப்பு'' என்ற நீண்ட பாடல்கள் இரண்டில் போற்றுகின்றார்.

### கருடப்பத்து

நாராயணனைக் கருடன்மீது எழுந்தருளுமாறு பாடப்பட்ட பக்திநூல்.

### அற்புத வாகனங்கள்

முடிவாக இரண்டு வாகனங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். ஒன்று சிறப்பானது; ஒன்று அற்புதமானது.

### குதிரை

திருப்புட்குழியில் குதிரை வாகனம் சிறப்பு வாய்ந்தது. இது உண்மைக் குதிரையைப் போலவே, அசைகின்ற உறுப்புகளைக் கொண்டிருக்கின்றது.

### கருடாழ்வார்

திருநறையூர் நாச்சியார் கோயில், கல் கருட வாகன சேவை மிகப்புகழ்பெற்றது. கருடாழ்வாரைச் சுமக்க, முதலில் நான்கு பேரும், அடுத்து எட்டுபேரும், கோயில் வாயிலருகில் வரும்போது அறுபத்து நான்குபேரும் தேவைப்படுகின்றார்கள். வாகனம் சிறுகச்சிறுகக் கனத்துக்கொண்டே வருகின்றன. வாகனம் அற்புதச்சக்தி வாய்ந்தது. எனவே வாகனங்களை மனதார வணங்குவோம்.

# திருஞான சம்பந்தரின் அழைப்பு!

– சித்தாந்த ரத்தினம் த. ஆறுமுகம்

உலகத்தை உய்விக்கத் தோன்றியவர் திருஞான சம்பந்தர். சிவபெருமானைத்தவிர வேறு யாரையும் போற்றாதவர் (கொன்றையான் அடியலால் பேணா எம்பிரான் சம்பந்தன் - சுந்தரர்) அதனால் அவர் இறைவன் அருளை முழுவதுமாகப் பெற்றவர். அவர் தமிழ்நாடு முழுதும் திருப்பயணம் செய்து தெய்வத் தமிழ்ப் பாடல்களை இன்னிசையுடன் பாடி மக்களைச் செந்நெறியாம் சிவநெறியில் செலுத்தினார். அங்கங் குள்ள மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்கள் படும் துன்பங்களைக் கண்டு இரங்கி, அத்துன்பங்களுக் கெல்லாம் காரணமான அவர் தம் தீவினைகள் தீரவழி காட்டினார். திருக்கோடிகா என்ற தலத்தை நோக்கிப் பயணம் செய்த போது வழியில் பார்த்தவர்களை யெல்லாம், அவர்கள் துன்பங்கள் நீங்கும் பொருட்டுத் தம்மைப் பின்பற்றி வருமாறு அழைத்துப் பின் வருமாறு அருளுரை வழங்கினார்.

1) இன்று நன்று நாளை நன்று என்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழக்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சோதியான் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** நேற்றுவரை துன்பப்பட்டவர், இன்று நல்ல நாளாக இருக்கும் என்றும், இன்றும் துன்பமே கண்டவர்கள், நாளை நல்லநாளாக அமை யும் என்றும், இப்படி எதிர்பார்ப்புடனும் இச்சை யோடும் நடை பெற்று வரும் வாழ்க்கை தேவைதானா? வேண்டா; என்னோடு வாருங்கள்.

மின்னல் போன்று ஒளி விளங்கும் சோதியாய் இருப்பவர், வெண்மையான நிலாப்பிறை, கங்கை ஆறு, கொன்றை மலர் மூன்றையும் ஒரு சேர முடி மீது வைத்த சிவபெருமானுக்குரிய திருக்கோடிகா என்ற தலத்தை அடையலாம். அங்கே சிறந்த வாழ்க்கைக் குரிய வழிகாட்டுவார் அவர்.

2) அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்து இராது நீர்
நல்லதோர் நெறியினை நாடுதும் நடம்மினோ
வில்லை அன்ன வாள்நுதல் வெள்வளை ஓர் பாகமாம்
கொல்லை வெள்ளை ஏற்றினான் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** வாழ்க்கை அல்லல் நிறைந்தது. அதனால் அதனைப் போற்றாமல் விட்டு நீங்கி என்னைப் பின்பற்றிப் புறப்பட்டு வாருங்கள். நல்லதும் ஒப்பற்றதுமான வாழ்க்கை நெறியை நாடிப்பெறலாம்.

வில்லைப்போல் வளைந்த ஒளிமிக்க நெற்றியுடன் வெண்மையான வளையல் அணிந்த அம்பிகையை ஒரு பாகத்தில் வைத்திருப்பவரும், முல்லை நிலத்துக்குரிய எருதை ஊர்தியாக உடைய வருமான சிவபெருமானுக்குரிய திருக்கோடிகா சென்று சேரலாம். அவரே நமக்கு நல்ல வாழ்க்கையை வகுத்து அளிப்பார்.

3) துக்கம்மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின்
அக்கு அணிந்து அரைமிசை ஆறணிந்த சென்னிமேல்
கொக்கிறகு அணிந்தவன் கோடிகாவு சேர்மினே


**(விளக்கம்)** இதுவரை துக்கமே மிகுந்த வாழ்வு வாழ்ந்து சோர்வாகக் காணப்படுகிறவர்களே, அந்த வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிவிட்டு, உங்களுக்குப் பொருத்தமான வாழ்க்கை நெறியில் செல்லுதற்கு என்னோடு வாருங்கள்.

இடுப்பில் எலும்பு கோத்து அணிந்தவர், கங்கை யைச் சூடிய முடிமீது கொக்கிறகையும் சூடிக் கொண் டிருப்பவரான சிவபெருமான் குடிகொண்ட திருக் கோடிகா என்ற தலத்தை அடையலாம். பொருத்தமான வாழ்க்கை நெறி அமையும்.

4) பண்டு செய்த வல்வினை பற்றறக்கெடும் வகை
உண்டு உமக்கு உரைப்பனால் ஒல்லைநீர் எழுமினோ
மண்டு கங்கை செஞ்சடை வைத்து மாதொர் பாகமாக்
கொண்டு உகந்த மார்பினான் கோடிகாவு சேர்மினே.

**(விளக்கம்)** முன் பிறவிகளில் நீங்கள் செய்த எத்தனையோ தீராத வினைகள் அடியோடு அழியும் வகை இருக்கிறது. உங்களுக்கு அதைச்சொல்லு வேன். விரைவாகப் புறப்பட்டு வாருங்கள்.

நீர் நிறைந்த கங்கையைச் சடையில் வைத்தும், பார்வதியை ஒரு பாகமாக வைத்தும் மகிழும் பரந்த



மார்பினரான சிவபெருமான் தங்கியுள்ள திருக்கோடிகா சேருங்கள். அங்கே அவர் அருளால் உம்முடைய வல்வினைகள் முழுதும் கெட்டு ஒழியும்.

5) முன்னை நீர் செய்த பாவத்தால் மூர்த்திபாதம்
சிந்தியாது
இன்னம் நீர் இடும்பையில் மூழ்கிறீர் எழும்மினோ
பொன்னை வென்ற கொன்றையான் பூதம்
பாட ஆடலான்
கொன் நவிலும் வேலினான் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** ஒரு வடிவத்தோடு அடியார்களை ஆட்கொள்ளவரும் இறைவன் திருவடியை எண்ணிப் பாராது இதுவரை இருந்து விட்டீர். காரணம் நீங்கள் முன்பிறவிகளில் செய்துவிட்ட பாவச் செயல்களே. இதனால்தான் இதுவரையில் துன்பத்தில் மூழ்கி இருக்கின்றீர். இனியும் இப்படி இருக்க வேண்டா; என்னோடு வாருங்கள். பொன்னைவிடச் சிறந்த மஞ்சள் நிறக் கொன்றை மலர் சூடியவர். பூதங்கள் சுற்றிநின்று பாட இவற்றின் நடுவில் ஆடுகின்றவர். அச்சம் தரும் மூவிலைச் சூலம் ஏந்தியவரான சிவ பெருமான் வீற்றிருக்கும் கோடிகாவைச் சேரலாம். அன்றோடு பாவமும் துன்பமும் தீர்ந்து போம்.

6) ஏவம் மிக்க சிந்தையோடு இன்பம் எய்தலாம்
எனப்
பாவம் எத்தனையும் நீர்செய்து ஒரு பயன் இலைக்
காவல் மிக்க மாநகர் காய்ந்த வெங்கனல்படக்
கோவம் மிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** இன்பம் எய்தலாம் என்பதுதான் உங்கள் குறிக்கோள். ஆனால் அதற்கேற்ப தெய்வ நாட்டம் உள்ள சிந்தை உங்களுக்கு வாய்க்காமல் போய்விட்டது. அதனால் செருக்கிய சிந்தையால் எத்தனையோ பாவச் செயல்களைச் செய்துவிட்டீர் ஒரு நல்ல பயனும் பெறவில்லை. போனவை போகட்டும்.

வானத்தில் காவல் மிகுந்த மூன்று மாநகரங்கள் திரிந்து கொண்டிருந்தன. தீமையே விளைவித்த அவற்றை வெந்து சாம்பலாகும்படி கோபித்த நெற்றிக் கண்ணுள்ள சிவபெருமான் கோவில் கொண்ட திருக் கோடிகா சேருங்கள். நல்ல சிந்தையும் இன்பமும் பெறலாம்.

7) ஏண் அழிந்த வாழ்க்கையை இன்பம் என்று இருந்து
நீர்
மாண் அழிந்த மூப்பினால் வருந்தல் முன்னம்
வம்மினோ
பூணல் வெள் எலும்பினான் பொன்திகழ் சடைமுடிக்
கோணல் வெண்பிறையினான் கோடிகாவு சேர்மினே.

**(விளக்கம்)** தெய்வசிந்தனை இல்லாததால் பெருமையற்ற வாழ்க்கையை இன்பம் என்று கருதி நீங்கள் மதிக்கப்படாத முதுமையை அடைந்து வருந்து வதற்கு முன் என்னுடன் வந்து விடுங்கள்.

வெண்ணிற எலும்பையே பூணாக அணிபவர் பொன்னிறமான சடைமுடியில் வளைந்த வெண் பிறையை அணிந்தவரான சிவபெருமான் நிலைகொண் டிருக்கும் திருக்கோடிகா என்ற தலத்தைச் சேரலாம். அங்கே இன்பவாழ்வுக்கு வழிபிறக்கும்.

8) மற்று இவ்வாழ்க்கை மெய் எனும் மனத்தினைத் தவிர்ந்து நீர்
பற்றிவாழ்மின் சேவடி பணிந்து வந்து எழுமினோ
வெற்றிகொள் தசமுகன் விறல் கெடஇருந்ததோர்.
குற்றமில் வரையினான் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** நீங்கள் முதலில் செய்ய வேண்டுவது இப்போது நீங்கள் வாழும் வாழ்க்கையை மெய் என்று நினைப்பதைத் தவிர்க்க வேண்டுவதுதான். பிறகு இறைவனை உறுதியாகப் பற்றி வாழுங்கள். அவருடைய சிவந்த திருவடிகளைப் பணிந்து கொண்டே என்னுடன் வாருங்கள். வெற்றியையே கண்டவன், பத்து முகங்களைக் கொண்ட இராவணனுடைய வீரத்தை வலிமையை செருக்கை அடக்கியவரும், குறை விலாத கயிலை மலையில்வீற்றிருப்பவருமான சிவபெருமான் அருள் வழங்கும் திருக்கோடிகா என்ற திருத்தலத்தை அணுகிவாருங்கள். மெய்யான வாழ்வைப் பெறலாம்.

9) மங்குநோய் உறும்பிணி மாயும் வண்ணம் சொல்லுவன்
செங்கண்மால் திசைமுகன் சென்று அளந்து காண்கிலா
வெங்கண் மால்விடை வேதியன் விரும்பும் ஊர்
கொங்குலாம் பொழில் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** நாளுக்கு நாள் உடலை உருக்கும் நோய், திடீரென்று மிகுந்து காணும் பிணி இவை அடியோடு மாய்ந்து நலமாகும்படி வழி சொல்லுவேன் கேளுங்கள்.

சிவந்த கண்ணனான திருமால் நான்முகன் இருவரும் போட்டியிட்டு முயன்றும் ஆராய்ந்து காணமாட்டாதவரும் சிவந்தகண்ணும் பெரிய வடிவமும் கொண்ட எருதை ஊர்தியாக உடைய அந்தணருமான சிவபெருமான் விரும்பிவாழும் ஊர் திருக்கோடிகா. அவ்வூரைச் சென்று சேர்வோம். அங்குதான் அவர் அருளால்நோயும் பிணியும் மறைந்துவிடும். பிறவிப்பிணியும் நீங்கும்.

10) தட்டொடு தழைமயில் பீலிகொள் சமணரும்
பட்டுடை விரிதுகிலினார்கள் சொல்பயனிலை
விட்டபுன் சடையினான் மேதகுமுழவோடும்
கொட்டமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே

**(விளக்கம்)** உடலை மறைக்கும் தடுக்குடன் தழைத்த மயில் பீலியையும் கையில் பிடித்த சமணர், உயர்ந்து நீண்டு பரந்த ஆடை அணியும் பௌத்தர் இருவர் சொல்லும் அறிவுரைகளால் ஒரு பயனும் இல்லை. விரித்து விட்ட புன்மையான சடைமுடி உடையவரும் பெருமை மிகுந்தமுழவோடு பறை கொட்ட நடனமாடுபவருமான சிவபெருமான் அருள் செய்யும் திருக்கோடிகா என்றதலம் அடைவோம். நற்பயன்கள் உண்டாகும்.

11) கொந்தணி குளிர்பொழில் கோடிக்காவு மேவிய
செந்தழல் உருவனைச் சீர்மிகு திறல் உடை
அந்தணர் புகலியுள் ஆயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ் வல்லார் பாவமான பாறுமே,

**(விளக்கம்)** மலர்க் கொத்துக்களை அணிகலன்கள் போலப் பெற்ற குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோடிகாவில் விரும்பி உறையும் செந்தழல் போன்ற வடிவினரான சிவபெருமானை அந்தணர்கள் வாழும் சீகாழியின் ஆராய்ந்த கல்வி கேள்விகளில் சிறந்த திருஞானசம்பந்தர் பாடியருளிய தமிழை வல்லமையாகக் கையாளுபவர்களுடைய பாவங்கள் கெட்டு ஒழியும்.

**குறிப்பு :** திருஞானசம்பந்தர் வாருங்கள் என்று அழைத்துச் சேருங்கள் என்று குறிப்பிடுவதால் அவரோடு உடன் வர இயலாதவர் அவருக்கு முன்னோ பின்னோ தாமே திருக்கோடிகா சென்றுசேரலாம் என்பது.

இந்த தலம் மயிலாடுதுறை கும்பகோணம் இரயில் பாதையில் நரசிங்கன் பேட்டை நிலையத் திலிருந்து வடக்கில் ஒரு கல் தொலைவில் உள்ளது இறைவன் கோடிகாஈசுரர். இறைவி வடிவம்மை.

திருக்கோடிகா அல்லது தொலைதூரத் தலங் களுக்குப் போக இயலாதவர்கள், தங்களுக்கு அருகில் உள்ள சிவன் கோவில்களில் உள்ளன்புடன் வழி பட்டாலே எல்லா தீமைகளும் நீங்கி எல்லா நலங் களையும் பெறலாம்.

★★★

# கந்தர் அனுபூதி

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

(முன் தொடர்ச்சி)

இத்தகு ரகசியத்தான் முருகப்பெருமான், சிவ பிரானுக்கு உபதேசித்தனர். இவ்வுண்மையை,.

''வள்ளிச்சன்மார்க்கம் விள்ளைக்கு நோக்க
வல்லைக்குள் ஏற்றும் - இளையோனே.''

எனவரும் ''கள்ளக்குவாற்பை'' திருப்புகழில் 7வது அடியில் பாடியுள்ளதிலிருந்து அறியமுடிகிறது.

விள் ஐக்கு - எனப்பிரித்து, வினவிய தாதைக்கு எனப்பொருள் கொள்ளவேண்டும். வல்லைக்குள் ஓர் நொடிக்குள் எனப்பொருள். இதனால் யான், எனது அற்றநிலையில்தான் உண்மை அறிவு துலங்கும். அத்தகு உண்மை அறிவை அறிவதுதான் ரகசியப் பொருள். இதைத்தான் தன் தந்தைக்கு முருகர் உபதேசித் தார் என்பதும் மேற்கூறிய கருத்து விளக்கும். இக் கருத்தையே ஊர்ஜிதம் செய்யும் வகையில்,

'அரவுபுனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை அறிவது பொருளென நிசிசர''

எனும் திருவண்ணாமலை தலத்துப் பாடலில், 8வது அடியில் பாடியுள்ளதிலிருந்து நமக்குத் திட்டவட்ட மாக புலனாகிறது.

**மற்றோர் பாடல்**

''அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரம் கெடமெய்ப் பொருள்பேசியவா
குமரன் கிரிராச குமாரிமகன்
சமரம்பொரு தானவ நாசகனே.''

**சுருக்க உரை**

அருணகிரியார் உபதேசம் பெற்ற வரலாற்றைக் குறிக்கின்றது. முருகவேளின் உபதேசச்சிறப்பே சிறப்பு; அது சகமாயையை அடியோடு ஒழித்துவிட்டது. பாடலில் பிமரம் என்பதற்குப் பொருள் விளங்காது அடியேன் கவலைப்படும் நாளில், ஒருசமயம் மணி மேகலை நூலைப்படிக்கும்போது, அதில் ''அரூப பிடமரும் உருபிபிடமரும்'' என்று பாடியுள்ளதை கவனித்து, இதற்குபொருள், பிரம்மாக்களின் வகை கள் என அறியப்பட்டேன். இந்நூல் பௌத்த மதத்தைத் தழுவிய பாடலாகும். இதைப்பற்றி தமிழறிஞரிடம் கேட்டதில், இலக்கணத்தில் ''ஏ'' காரத்திற்கு ''ட''கரம் வரலாம் எனவும் அதனடிப்படையிலேதான் மேலே சொன்னசீரை வைத்து பொருள் கொள்ளவேண்டும் என்றனர்.

உதாரணத்திற்கு முகரி என்பது முகடி என வருவது இயல்பு. மேலே சொன்ன பாடலில் ''பிரமம்'' என்று கூறவேண்டிய இடத்தில் ''பிமரம்'' என்று எதுகையை நோக்கி இப்படி எழுத்துமாறி அமைந் துள்ளதை அறியமுடிந்தது. பிரமம் என்பது ப்ரமம் என்ற வடசொல்லின் திரிபு, மயக்கம் என்பது பொருளாகும். பிமரம் - பிரமம் (கலக்கம்) என்பதன் மரூஉ, நன்னூல் சூத்திரம் 239, 267.

இதற்கு சில உதாரணங்கள் கூறக்கேட்டேன்.

வைகாசி என்பது இயல்பான பெயரானாலும், வைசாகி என்பதே சரியான பெயராகும். விசாக நட்சத்திரத்தில் இந்த மாதம் சிறப்பு பெற்றதால், அப்பெயர்வழங்கலாயிற்று. பிற்காலத்தில் அப்பெயரே எழுத்துமாறி வைகாசி என மருவியது.

சிவிறி என்பது விசிறி என்று மருவி வந் துள்ளது. மிஞிறு என்பது ஞிமிறு என வரும், இரண்டு வார்த்தைக்கும் பொருள் ''வண்டு'' என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. பவழத்தை - பழவம் என்று வழக்கத்தில் கூறுவது போன்றது.

கடைசியாக ஒரு பாடலைப் பார்ப்போம்:

மதிகெட் டறவா டிமயங்கி, அறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

**சு.உரை:** முருகா! கங்கா நதிக்கு மைந்தனே! ஞானசுகத்தலைவனே! அதிகபாவங்களை பண்ணி யுள்ள திதிஎன்பவளின் புத்திரர்களின் கீர்த்தியை கெடுத்து அழித்த பராக்ரமசாலியே! அறிவிழந்து கெட் டழிதலோ என் தலை எழுத்து என மனம் நொந்து

கூறியுள்ளார். இதற்கு மூலகாரணம் பிரம்மாவே. அவன் மேல்பழிபோட்டு, அவனைச்சாடுகிறார் அருண கிரி. திருச்செங்கோட்டுக்குச்சென்று, மலைமீதுள்ள முருகனைத் தரிசித்ததும், பேரானந்தம்கொண்டு, உனைக்கண்டுதொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகன் என கீழ்வரும் கந்தரலங்காரப் பாடலால் பாடியுள்ளதைப் பார்க்கலாம்.

''மாலோன்மருகனை, மன்றாடி மைந்தனை, வானவர்க்கு மேலான தேவனை, மெய்ஞ்ஞானத் தெய்வத்தை, மேதினியில் சேலாற்றுவயற் பொழிற் செங்கோடனைச் சென்றுகண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே'' என பிரமனைச் சாடுகிறார்.

**தன் குறைகூறி மனம்புழுங்கிக் கதியிலி தனக்கும் கதியுளதோ - எனல் (16 பாடல்கள்)**

1. வளைபட்டகை - பாடல் எண். 4
2. மகமாயை - பாடல் எண். 5
3. திணியானமன - பாடல் எண் 6
4. மட்டூர்குழல் - பாடல் எண் 9
5. பேராசை எனும் - பாடல் எண் 16
6. அடியைக்குறியா - பாடல் எண் 23
7. கூர்வேல் விழி - பாடல் எண் 24
8. மெய்யேயென - பாடல் எண் 25
9. ஆதாரமிலேன் - பாடல் எண் 26
10. மின்னேநிகர் - பாடல் எண் 27
11. கலையேபதறி - பாடல் எண் 32
12. சிந்தாகுல - பாடல் எண் 33
13. மாவேழ்சனனம் - பாடல் எண் 39
14. வினையோடவிடும் - பாடல் எண் 40
15. ஆறாறையும் நீத்து - பாடல் எண் 47
16. மதிகெட்டறவாடி - பாடல் எண் - 50

★★★

**யான் செய்த பிழையென்னோ என நொந்து தொழுதிரங்கல் ( இரு பாடல்கள்)**

1. இல்லேயெனுமாயை - பாடல் எண் 29
2. பாழ்வாழ்எனும் - பாடல் எண் 31

**நெஞ்சோடு கிளத்தல் (3 பாடல்கள்)**

1. கெடுவாய்மனனே - பாடல் எண் 7
2. கைவாய் கதிர்வேல் - பாடல் எண் 14
3. கிரிவாய் வடிவிக்ரம - பாடல் எண் 37

**வறுமையின் கொடுமை**

1. வடிவும் தனமும் மனமும் குணமும் - பாடல் எண் 19

**உலகினர்க்கு உபதேசம்**

1. யாமோதிய கல்வியும் எம் அறிவும் - பாடல் எண் 17


கந்தரனுபூதியில் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட ஒரு சில பாடல்களுக்கு, அடியேனது சிற்றறிவுக்கு எட்டியவரை கருத்துக்களை கூறியுள்ளதில், சொற் குற்றம், பொருட் குற்றம் ஏதேனும் அறியாமல் எழுதி யிருந்தால், எனது முதுமை பிதற்றல் எனக் கொள்ள வும். குணம் காணின் இறைவன் திருவருள் எனக் கொள்ளவும். மந்திர மாலையாகிய கந்தரனுபூதி பாடல் களை தினமும் கருத்துணர்ந்து ஓதி, வருவினைகளை தீர்ப்போமாக.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

(நிறைவுற்றது)

# கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்.

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



நிழலின் அருமை, வெய்யிலில் தெரிந்தால்

நிழலை உணர, வெய்யிலில் போவதோ?

வளமையின் அருமை, வறுமையில் தெரிந்தால்,

வளமையை அடைய, வறுமையும் தேவையோ?

ஒளியின் அருமை, இருளில் தெரிந்தால்,

ஒளியினைக் காண இருளில் செல்வதோ?

களிப்பின் அருமை கவலையில் தெரிந்தால்,

களிப்பினைத் தேடக், கவலையும் தேவையோ? 1

கல்வியின் அருமை, கல்லாததில் தெரிந்தால்

கல்வியைத் தேடக் கல்லாமை தேவையோ?

சொல்லின் அருமை, சொல்லாததில் தெரிந்தால்

சொல்லால் வெல்ல, சொல்லாமை தேவையோ?

வல்லமையின் அருமை, வலுவின்மையில் தெரிந்தால்,

வல்லமை வளர, வலுவின்மை வேண்டுமோ?

நல்லவையின் அருமை, தீமையில் தெரிந்தால்,

நல்லன செய்ய தீமைகள் தேவையோ? 2

உடலின் அருமை, உடல்வலியில் தெரிந்தால்,

உடல்நலம் காக்க உடல்வலி தேவையோ?

கடவுளின் அருமை, கஷ்டம்வரத் தெரிந்தால்,

கடவுளை நாடக் கஷ்டங்கள் தேவையோ?

நடப்பது எல்லாம் நான்முகன் செயலென

நல்வழி நடப்போர் நன்மையே அடைவர்,

கடவுளை நம்பிக் காலமெல்லாம் துதித்தால்,

கடவுள் நம்மைக் கைவிட மாட்டார். 3

# "உயிர் கொடுத்துப் பழி கொண்டான்"

- என். சிவராமன், பி.காம்., பி.எல்.

யார்? உயிர் கொடுத்துப் பழி கொண்டான்? இராவணன்தான். இது கம்ப ராமாயணத்தில் கம்பர் கொடுக்கும் அடைமொழி இராவணனுக்கு. சீதை மேல் கொண்ட பொருந்தா ஆசை அவன் உயிரை மட்டுமா பறித்தது! அவனுக்குப் பழியும் உண்டானது.

முறைதவறினால் இப்படித்தான். யாராக இருந்தாலும் சரி... உயிர் கொடுத்துப் பழிகொண்ட பித்தா' என்று வீபிஷணன், இராவணனை அழைப்பதும் இங்கு நோக்கத் தக்கது. பொருந்தா காமம், பித்தனைத் தவிர வேறு யாரிடம் ஏற்படும்? சொல்லுங்கள்...

கம்பன் காட்டும் ஆரம்ப இராவணன் வீரம் மட்டுமே உடையவன். சூர்ப்பணகைதான். பொருந்தாக் காமத்தை அவனுள் புகுத்தியது.

இதோ, இராவணனது வீரத்தை குறிக்கும் கம்பனின் பாடல்:

''புலியின் அதள் உடையானும், பொன்னாடை
புனைந்தானும், பூவினானும்
நலியும் வலத்தர் அல்லர்; தேவரின் இங்கு
யாவர், இனி நாட்டல் ஆவார்?''

'இராவணனை புலித்தோலுடைய சிவனும், பொன்னாடை புரிந்த விஷ்ணுவும், பூவாடை பிரமனும், ஒன்று கூறினும் வெல்லமுடியாது எனும் பொழுது, தேவர்கள் இவனை வெல்ல முடியுமா? '' முடியாது என்பதே உண்மை.

சரி... மாதர்களிடம் கலவிக்காலத்திலாவது பணிந்தனனா என்றால் அதுவும் இல்லை..

இப்படி ஒரே பாடலில் அவனது வீரத்தையும், காமத்துக்குப் பணியாத அவனது மனத்தையும் காட்டுகிறார் கம்பர்.

சூர்ப்பணகை வந்ததிலிருந்துதான் அவன் காமம் அதிகரித்து வீரம் மறைய ஆரம்பிக்கிறது. எல்லாம் Step by Step 'தான். படிப்படியாக அவனது வீழ்ச்சியை நாம் காணப் போகிறோம்.

சூர்ப்பணகையின் மூக்கை அரிந்த லட்சுமணன் அவளைத் துரத்திவிட்டதும், அவள் நேராக மருத்துவ மனைக்காச் செல்கிறாள்? இல்லை. இராவணனிடம் வருகிறாள்.

இதைப்பார்த்த இராவணன் வாய்களில் புகை புறப்பட, தொடர் மீசைகள் துடிக்க, இடி என உறுமி, 'இது யாவர் செயல்', என்கிறான்.

'மானுடர் செய்தனர்' என்றாள் அவள். அப்பொழுதுதான். அவன் கோபம் அதிகமாகும் என்பது சூர்ப்பணகையின் கணக்கு.

'ஊனுடை உடம்பு உடைமையோர் உவமையில்லா மானிடர்; தடித்தனர்கள் வாள் உருவி' என்றாள்.

அப்போதும் கோபம் அடையாத இராவணன், சூர்ப்பணகையிடம் ஒரு கேள்வி கேட்டான். அப்பொழுது 'நீ என்ன செய்தாய்!'

திணறிப் போனாள் இவள்.. என்னடா இது?

'ஆயிடை எழுந்து சீற்றத்து அழுந்திய துன்பம் மாறி
.... நீயிடை இழைத்த குற்றம் என்னை கொல்'

வீரன் நடந்து கொள்ளும் பான்மை இராவணனிடம் இன்னும் உள்ளது என்பதையே இது காட்டுகிறது.

சூர்ப்பணகை, இவனை அடிக்க வேண்டிய இடத்தில் அடிக்க முடிவுச் செய்து 'இராமனோடு வந்துள்ள ஒரு பெண் அழகி என்றும் அவளால் இது நேர்ந்தது என்றும் பேசுகிறாள். பேசுவது என்ன? இராவணனது காமத்தியை தூண்டினாள்.

'மின் வயின் மருங்குல் கொண்டாள்; வேய் வயின்
மென்தோள் கொண்டாள்; பொன்வயின் மேனி
கொண்டாள்;; .........

யார் சீதைதான்.

'யார் அவள்' - அடக்கமாகி விட்டான் இராவணன். 'அவள் பேர் சீதை; கள் எனக் கனிந்த இன்சொல்; தேமலர்க்கூந்தல்; பஞ்சைப் போல் பாதம்; பவளம் போல் விரல்கள்; கடலினும் பெரிய கண்கள்!....

அடுக்கிக் கொண்டே போகிறாள் சீதையின் அழகை சூர்ப்பணகை.

இப்பொழுது, கோபம், வீரம், மானமெல்லாம் பாவம் நின்ற இடத்தில் நில்லாத தன்மை போல், விடைபெறத் தொடங்கின. ஒரு கை விளக்கு, மற்ற விளக்குகளைத் தொடர்ச்சியாக ஏற்றுவது போல், வீரம் இருந்த இடத்தில் காமம் பிடித்துக் கொண்டது என்கிறார் கம்பர்.

அடுத்து மாரீசன் படலம் ஆரம்பம். மானுடருடன் போர் செய்ய விரும்பவில்லை என்றும் சீதையை கவரத் துணைசெய்யுமாறும் மாரீசனிடம் இறைஞ்சுகிறான் இராவணன்.

அதிர்ச்சி அடைந்தான் மாரீசன். 'மன்னா! ஊழ் வினை உன்னை பிடித்து விட்டதோ!'

'மன்னா! நீ உன் வாழ்வை முடித்தாய்! மதி அற்றாய்!
உன்னால் அன்று ஈது; ஊழ்வினை
என்றே உணர்கின்றேன்'

அடுத்தவன் மனைவியை கவர்ந்தவன் எவன் உயர்ந்தவன் என்று சொல்லும் மாரீசன் இராவணன் கருத்தை மறுக்கிறான்.

'மன்னா! இராமனை வென்று, சீதையை அடை'' என்று சொல்லும் மாரீசனுக்கு இராவணன் 'போரில் அவர்கள் இறந்தால், சீதையும் உயிர் துறப்பாள். எனவேதான் இத்திட்டம்' என்கிறான்.

கவர்ந்து வந்தால் மட்டும் சீதை உயிர் தரிப்பளோ! என்ற எண்ணம் காமத்திலிருந்த இராவணன் அறிவுக்கு எட்டவில்லை.

படிப்படியாக போர்க்களத்துக்கு இப்பொழுது நாம் வருகிறோம்.

இராவணனிடம்

'இன்று போய் நாளைவா' என்கிறான் இராமன்; முதல் போரில் அவன் தோற்றவுடன்.

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும், நாரதருக்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும் உடைய இராவணன் தார் அணி மவுலி பத்தும்; சங்கரன் கொடுத்த வாளும்; வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்.

தான் தோற்றதால் மற்ற மன்னர்கள் நகைப்பரே என்று இராவணன் கவலைப்படவில்லை..... வேல் நகு நெடுங்கண், செவ்வாய், மெல்லியல், மிதிலை வந்த ஜானகி சிரிப்பாளே என்பதே அவனது நாணம். காமம், இவ்வாறு வீரத்தை வெல்கிறது.

மாலியவானிடம் சொல்கிறான் இராவணன்' வேதம் தப்பினபோதும், இராமன் தனது உமிழ் சரங்கள் தப்பா' என்கிறான், இராமனது வீரத்தை.

காமம், அடுத்தவர் வீரத்தையும் புகழச் சொல்கிறது. மேலும் சொல்கிறான்... பாருங்கள்.

ராகவன் மேனியும், அவன் வீரச் செயல்களும் கண்டால், மன்மதனும், நாமும் நாய்களே'

இப்பொழுது சீதையிடம் பேசுகிறான் ராவணன் 'தோற்பித்தீர்; மதிக்கு மேனி சுடுவீத்தீர்'; தென்றல் தூற்றவேர்ப்பித்தீர்; வயிரத்தோளை மெலிவித்தீர்; வேனில் வேளை........

பேசுவார் ஒருவர்க்கு ஆவி தோற்றிலேன்; பெண்பால்
வைத்த ஆசைநோய் கொன்றது என்றால்
ஆண்மைதான் மாசுரைத்தோ?

'நான் வீரத்தில் தோற்கும் நிலை வரவில்லை. ஆனால், உன்மீது நான் கொண்ட காமம் என் உயிரை பறித்துவிடும் போலுள்ளதே' என்பது இப்பாடலின் பொருள்.

முதலில் 'வென்றி மாதர் வலிய புலவியிலும் மகுட நிரை வணங்காதவன்' என்றவர் இப்பொழுது', 'முடிபடி நெடிதின் வைத்தான்' என்கிறார். அதாவது, சீதையின் கால்களில் விழுகிறான்.

அடுத்து இந்திரஜித்து வருகிறான். 'ஏதோ நம் குலம் செய்த பாவத்தாலே ஒரு கொடும்பகை தேடிக் கொண்டாய்! என்கிறான் அவன்.

'தந்தையே! சீதையை விடுவீர்! என்று கெஞ்சுகிறான் இந்திரஜித்து தந்தை இராவணனிடம்.

யுத்தத்தில் இறக்கிறான் இந்திரஜித்து.

'உனக்கு ஈமச்சடங்குகளை செய்யவேண்டி வந்துவிட்டதே.. எனக்கல்லவா நீ செய்யவேண்டும்' என்று அழுகிறான் இராவணன்.

மண்டோதரி, தன் மகன் இந்திரஜித் இறந்த துக்கத்தோடு, நாளை தன் கணவன் இராவணனின் கதியும் இதுதானே.. என்று நினைத்து அழுகிறாள்.

''நேரிழை ஒருத்தி நீரால்'' (ஒரு பெண்ணின் மேல் வைத்த விருப்பத்தால்) இராவணனது வீரமே பழுதுபட்டுவிட்டது.

'என்னில்லார் உலகத்துளார்' என்று அழுகிறான் இவன்.

எல்லாமே சேர்ந்து ஆங்காரம் உண்டாகி விட்டது அவனுக்கு. 'சீதையை வெட்ட கிளம்பி விட்டான்' இராவணன். ஒரு குழந்தை ஆங்காரம், உண்டானால், பொருட்களை உடைப்பது போல, குழந்தை மனநிலையில் இப்பொழுது உள்ளான் இராவணன்.

தாயுமானவர் கூட ஆங்காரத்தை 'இராவணா காரம்' என்கிறார்.

'ஆங்காரமான கொடிய வேட வெம்பேய்....
..... இராவணா காரமாகும்.

என்பது அவரது பாடல்.

சீதையை 'கல் நெஞ்சக்காரி' என்கிறான் இராவணன்.

இப்பொழுது மகோதரன் தோன்றுகிறான்: 'இராவணா! காற்று, நீர், வான் உள்ள அளவும் பெரும் பழி பிடித்துக்கொண்டாய்!

'மங்கையை, குலத்துளாளை, தவத்தியை,
முனிந்து வாளால்
சங்கை ஒன்றி இன்றி கொன்றால்' குலத்துக்கே
தக்கான்' என்று
கங்கை அம் சென்னியானும், கண்ணனும்,
கமலத்தோனும்
செங்கையும் கொட்டி உன்னைச் சிரிப்பரால்
'சிறியன்' என்னா!''

''நீ சீதையைக் கொல்வாயானால் இராவணன் குலமே வீரமற்றது என்று சிவனும், கண்ணனும், பிரம்மனும் சிரிப்பார்கள்! உன்னைச் சிறியன் என்று இகழ்வார்களே!''

'சரி' என்று போருக்குச் சென்று வீழ்ந்தான்.

இப்போது, விபீஷணன் புலம்ப ஆரம்பிக்கிறான். 'இராவணா! உலகில் நஞ்சு உண்டவரைத் தான் கொல்லும். கண்ணால் கண்டால் எந்த நஞ்சும் ஆளைக் கொல்லாது. ஆனால், கண்ணால் கண்டாலே உயிரை போக்கிவிடும் விஷம் சீதை என்று அன்று உன்னிடம் சொன்னேனே கேட்டாயா?....''

'மாற்றான் மனைவியை எடுத்துவந்து பழி ஏற்றுக்கொண்டாயே!'' என்று அழுதான்.

'போர் மகளை, கலைமகள், புகழ் மகளை
தழுவிய கை பொறாமை கூர
சீர்மகளை, தழுவுவான் உயிர்கொடுத்துப்
தெரிவரிய தெய்வக்கற்பின்
போர்மகளை, தழுவுவான் உயிர்கொடுத்துப்
பழிகொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினாயோ! திசையானைப்
பனையிறுத்த பணைத்த மார்பால்?'

இதன் பொருள்: 'இராவணா உனக்கு 20 கைகள்; நீ சில கைகளால், அடிக்கடி போர்மகளைத் தழுவி இருக்கிறாய். வீரம் உள்ள யாவரும் அவளைத் தழுவலாம். நீ சில கைகளால் கலைமகளைத் தழுவி இருக்கிறாய்! அறிவுள்ள எவரும் அவளைத் தழுவலாம். நீ சில கைகளால் புகழ்மகளைத் தழுவி இருக்கிறாய். முயற்சி உடையோர் எவரும் அவளைத் தழுவலாம். ஆனால், சில கைகளால் சீதையை தழுவ முற்பட்டவுடன், மற்ற கைகள் பொறாமை கொண்டு உன்னை வீழ்த்திவிட்டன. அதனால் உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தனாகி, மண்மகளைத் தழுவி விட்டாய்!''

கம்பர் இக்கருத்துக்களை திருக்குறளை அடிப்படையாகக் கொண்டே எழுதினாரோ என்றுத் தோன்றுகிறது. 'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு'' என்பது குறள்.

'பிறன் மனையாளை விரும்பாதிருப்பது பேராண்மை. அதுவே சான்றோர்கட்கு அறமும், ஒழுக்கமும் ஆகும்.''

இதனை உணராததால், ராவணன் அழிந்தான். ஒருவனுக்கு ஒருத்தி என்பதே அறம் என்று இதிலிருந்து நாம் அறியலாம்.

★★★

## ஏறும் கரை காண வேண்டும்

சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டு உருண்டு
கூறும் முலையும் இறைச்சியும் ஆகிக் கொடுமை யினால்
பீறும் மலமும் உதிரமும் சாயும் பெருங்குழி விட்டு
ஏறும் கரை கண்டிலேன் இறைவா கச்சி ஏகம்பனே.

- பட்டினத்தடிகள்

# தட்சிணாமூர்த்தி திருவருட்பா - விரிவுரை

- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்,

### 6) ஞானமும் துறவும்

பெரிய பரமானந்த பரமசுக வாழ்வு இப்
பிறப்பிலே வருவதன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கை எல்லாமும் விட்டுதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத் தாசையும் 'சீ'யென்று விட்டெறிந்
தேகாந்தமாய் இருந்தால்
இவ்வுலகில் இடரேதும் இல்லாமல் வருமின்பம்
யாவர்க்கும் இல்லையென்று
தெரிய மறை சொல்லவும் பெரியவர்கள் சொல்லவும்
தீரத்துறந்திராத
சிறியவன் இவன் என்றோ பராமுகமதாகவே
தேவரீர் நின்ற செய்தி?
உரிய துறவுடன் ஞானம் உதவுவதும் நீரன்றி
ஒரு தெய்வம் வேறில்லையே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே.

மனித வாழ்க்கையில் இன்பத்தைவிட துன்பமே நிறைந்துள்ளது. ஏமாற்றம், தோல்வி, பிரிவு, வறுமை, மரணம் போன்ற காரணங்களினால் மனத் துன்பம் வருகிறது. நோய், விபத்து போன்ற காரணங் களினால் உடல் துன்பமும் வருகிறது.

மனத்தாலும், உடலாலும் பலவகைத் துன்பங் களைச் சந்திக்க வேண்டியுள்ள மனிதனின் மகிழ்ச்சி மிகச் சிறியதே.

பாழுங்கிணற்றில் வீழ்ந்துவிட்டான் ஒருவன். கிணற்றின் கரையில் புலியும் சிங்கமும் அவனை அடித்துத்தின்ன காத்திருக்கின்றன. கீழே சகதியில் உடல் புதைந்து கொண்டிருக்கிறது. கிணற்றின் பக்கச் சுவற்றில் நச்சுப்பாம்பொன்று அவனைக் கொத்திடச் சீறி நிற்கிறது. கரையிலுள்ள ஒரு மரத்திலிருந்து கொடி யொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அது கிணற்றின் அடிப்பகுதிவரை நீண்டிருந்தது. அதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவிட முயற்சிசெய்தான். கொடி யின்மேல் பாகத்தை மரங்கொத்திப் பறவையொன்று தன் அலகினால் கொத்தி வலுவிலக்கச் செய்து கொண்டிருந்தது. எந்த நேரமும் கொடி அறுந்து விடக்கூடும். கீழே சகதி. பக்கத்தில் பாம்பு. கரையில் கொடிய விலங்குகள்.

இந்த நிலையில் கொடியைப் பிடித்து ஊச லாடிக் கொண்டிருக்கும் மனிதனின் கண்ணில் பட்டது ஒரு தேனடை. கரையிலிருந்த மரத்தின்மீதிருந்த அத் தேன்டையிலிருந்து சில தேன்துளிகள் கிணற்றினுள் விழுந்தன. மேலே, கீழே, பக்கத்தில் என்று எங்கும் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் அந்த நிலையிலும் மனிதன் கீழே சொட்டும் தேனைக் கண்டவுடன் தன் நாக்கை நீட்டினான். இரண்டொரு துளி தேன் அவன் நாவில் வீழ்ந்தது. அத்தனை ஆபத்துக்கிடையில் சில துளி இனிப்பான தேன்; அதனையும் சுவைக்க அலை கிறான் மனிதன்.

ஆம்! அல்லல்களும் ஆபத்துக்களும் நிறைந்த மனித வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது சில துளி கள்தான். நம் முன்னோர்கள் மேற்கண்ட உருவகக் கதையின் வழியே அதனை உணர்த்தினர்.

'பெரிய பரமானந்த சுகவாழ்வு இப்
பிறப்பிலே வருவதன்று.''

என இப்பாடலைத் தொடங்குகிறார் சுவாமிகள். 'இன்பமே எந்நாளும்'' என்பது எப்படிச்சாத்தியமாகும்? அதனை அடுத்துவரும் பகுதிகளில் உரைக்கிறார்?

இப்பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் விட்டு உதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத் தாசையும் 'சீ' என்று விட்டு எறிந்து
ஏகாந்தமாய் இருந்தால்
இவ்வுலகில் இடரேதும் இல்லாமல் வரும் இன்பம்''

இராமாயணப் போருக்குப் பெண்ணாசையும், பாரதப்போருக்கு மண்ணாசையும் காரணம். தனிப் பட்டவரின் மண்ணாசையைவிட சில நாடுகளின் பொன்னாசையே தற்காலப் போராட்டங்களுக்குக் காரணமாக உள்ளது. அதாவது, செல்வத்தைத்தன தாக்கிக் கொள்ளவே அவை போராடுகின்றன.

பொன்னாசையை சுவாமிகள் 'இரணியத் தாசை' என்கிறார். இரணியம் - பொன்.

பிரபஞ்ச வாழ்வு என்னும் உலகியல் ஆசா பாசங்களை விடுத்து, மூவாசைகளையும் தயங்காமல்

விட்டெறிந்தால் இவ்வுலகில் இன்பம் வரும். அதுவும் ஏகாந்தமாய் தனியாய் இருந்தால் இடரேதும் இல்லாமல் இன்பம் வரும்.

''தனித்திரு'' என்று வடலூர் வள்ளலார் உரைத்தார். 'இனிது! இனிது! ஏகாந்தம்!'' என்றார் ஔவையார். இவை ஈண்டுச் சிந்தித்தற்குரியன. உலகில் வாழ்ந்தாலும் இறைவனுடன் ஒன்றித் தனித்திருப்பதே 'ஏகாந்தம்' என்பது.

பட்டினத்தார் பல கோடி பொன்னையும் 'சீ' என்று விட்டெறிந்தார்.

சித்தார்த்தர் நள்ளிரவில் இளம் மனைவியையும், குழந்தையையும் அரசபோகத்தையும் விட்டெறிந்து சென்று 'புத்தர்' ஆனார்.

பழங்கால மன்னர்கள் முதலில் மண்ணாசையாலும், பொன்னாசையாலும், பெண்ணாசையாலும் பல நாடுகளையும் வென்று 'சக்கரவர்த்தி' என்ற நிலைக்கு வருவார்கள். அந்தப்புரத்தில் அநேகப் பெண்களையும் சேர்த்து வைத்துக் கொள்வார்கள்.

அவர்களில் ஒருசிலர் மட்டும் அவையனைத்தும் உண்மையான இன்பப் பொருட்களல்ல என உணர்ந்து இறுதியில் 'விச்வஜித்' என்ற வேள்வியைச் செய்வார்கள். அந்த வேள்வியில் தமக்குரிய அனைத்தையும் தானமாக அளித்துவிட்டு, கட்டிய துணியுடன் கானகம் சென்று தவவாழ்க்கையே மேற்கொள்வர். அதுவரை பெற்ற வெற்றிகள் மிகச் சிறியவை. அனைத்தையும் துறந்து செல்லும் வேளையில் அவர்கள் பெறும் வெற்றியே - மூவாசையை வென்ற வெற்றியே உண்மையில் பெரியவெற்றியாகும். ஆகவே, அந்த வேள்வியை 'விச்வஜித்' என்றனர்.

இராமரின் முன்னோர் ஆகிய இரகு மகாராஜனும், பதினாறாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்து சைவநெறி வளர்த்த ஸ்ரீமத் அப்பய்ய தீட்சிதரின் தந்தையான ஸ்ரீ ரெங்கராஜ தீட்சிதரும் அத்தகைய 'விச்வஜித்' வேள்வி இயற்றியவர்கள்.

அத்தகையவர்களுக்குத்தான் இவ்வுலகில் இடரேதும் இல்லாமல் இன்பம் வரும்.

''யாவர்க்கும் இல்லை.''

உலகியல் வாழ்வில் உழன்றுகொண்டிருக்கும் மற்ற எவருக்கும் பெரிய பரமானந்த சுகவாழ்வு கிட்டாது. இதனை நாம் தெரிந்துகொள்ளும்படி மறைகள் உபதேசித்துள்ளன. பெரியவர்களும் அவ்வுண்மையைத் தம் அனுபவத்தால் கண்டு உரைத்துள்ளனர்.

''இவற்றை நன்கு அறிந்திருந்தும் முற்றிலும் துறவாத சிறியேன் எனக்கருதி ஈசன் எனக்கு அருள் செய்யவில்லை போலும்!'' எனப் பணிவாகக் கூறிக் கொள்கிறார்.

''தீரத் துறந்திராத சிறியவன் இவனென்றோ
பராமுகமதாகவே தேவரீர் நின்ற செய்தி?''

என வினவியவர் உரிய துறவும் ஞானமும் அளிக்கும் சிவபெருமானே என உரைக்கிறார். அதுவும் யோக மூர்த்தியான தட்சிணாமூர்த்தியே ஞானத்தின் வாயிலாக துறவும், மோட்சமும் அருள வல்லவர் என உணர்தல் வேண்டும்.

முதலில் வேறு தெய்வங்களை வழிபட்ட நரேந்தரின் வண்டிக்காரர் உரைத்ததைக் கேட்டு, சிவபெருமானே துறவும், பெரியபரமானந்த சுகவாழ்வும் முத்தியும் தரும் தெய்வம் என உணர்ந்து, சிவபெருமானின் திருவுருவத்தை அன்று முதல் வழிபடத் தொடங்கி வீரத் துறவி விவேகானந்தர் என்று உயர்ந்து உலகறிய வாழ்ந்தார். இது விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு காட்டும் அண்மைக்கால உண்மை.

தென்முகப் பரமனே மோட்சப் பிரதான (வீடளிக்கும்) மூர்த்தி என்பது இப்பாடல் வலியுறுத்தும் கருத்தாகும்.

★★★


## மறலி விட்ட தூது

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டிஎன் கண்எதிரே
மாதென்று சொல்லிவரு மாயை தன்னை மறலிவிட்ட
தூதென்று எண்ணாமல் சுகமென்று நாடும்இத் துர்புத்தியை
ஏதென்று எடுத்துரைப்பேன் இறைவா கச்சிஏகம்பனே

- பட்டினத்தடிகள்

# ஆழ்வார்கள் பாடலின் படி பெருமாளுக்குரிய மலர்கள்

- ஸ்ரீகாந்த் பட்டாச்சார், ஒப்பிலியப்பன் கோயில்



## திருமாலுக்கு உரிய மலர்கள்

| | |
|---|---|
| செண்பகப்பூ | கருமுகில் பூ |
| மல்லிகைப்பூ | குருக்கத்திப்பூ |
| பாதிரிப்பூ | செங்கழுநீர்ப்பூ |
| இருவாட்சிப்பூ | புன்னைப்பூ |

திருமாலுக்கு செண்பகப்பூ மிக உயர் வானது. ஸ்ரீதேவிக்கு மல்லிகை உயர்வானது.

### பஞ்ச பூதங்கள்

ஆகாயம், வாயு, அக்னி, நீர், பூமி

இவைகள் தன்மாத்திரமிருந்து உண் டானது. தன் மாத்ரம் ரூபம், தேஜஸ், ரசம், கந்தம் என்பதாகும்.

இவைகள் பால், தயிராகும் போது (தோயும் போது) இடைபட்ட நிலை போன்றது. இது சூட்சம நிலை.


இதைத் திருமழிசை ஆழ்வார்,

''பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற
நான்குமாய் தீநிலாய
மூன்றுமாய்ச் சிறந்த கால்இரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி .... என்று


அருளிச் செய்திருக்கிறார்

(திருச்சந்த விருத்தம் - 1)

பஞ்ச பூதங்களிலிருந்து உலகமும், எல்லா பொருட்களும் உண்டாகின்றன. ஒவ்வொன்றுக்கும் இடையே உள்ள சூட்சமமான நிலை தன்மாத்ர மாகும்.



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 15.8.2001 அன்று சுதந்திரத் திருநாள் பொது விருந்து – சிறப்பு வழிபாடு விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. இவ் விழாவில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திருமிகு தளவாய் சுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் உதவி ஆணையாளர் செயல் அலுவலர் திருமிகு அ. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் அலுவலகத்தில், மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களின் தலைமையில் சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு. பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களும், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களும், கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகையா, பி.எஸ்.சி., பி.எல்., இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு ப. தனபால், எம்.ஏ., பி.எல். மற்றும் இந்துசமய அறநிலையத் துறையின் மண்டல இணை ஆணையாளர்கள், இணை ஆணையாளர் – செயல் அலுவலர்கள், துணை ஆணையாளர் – செயல் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

★ ★ ★

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.